பக்கங்கள்: பத்து

Registered as a newspaper

# உதயன்

விலை ரூா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2028 மார்கழி 24 வியாழக்கிழமை (08-01-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 38

# வவுனியாப் பகுதியில் பாதுகாப்பு அதிகரிப்பு

## பிஸ்டல் குழுக்களின் நடமாட்டம் காரணம்

வவுனியா, ஜனவரி 8

வவுனியா நகரப்பகுதியில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுவருகிறது.

நகருக்குள் நுழையும் பாதைகளில் கடந்த சில நாள்களாக முள்ளுக் கம்பிகள் போடப்பட்டு, சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வவுனியா நகரப்பகுதியில் விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழு ஊடுருவியதாகக் கிடைக்கும் தகவல்களைத் தொடர்ந்தும்—

நகரப்பகுதிக்குள் கொலைச் சம்பவங்கள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்தும்—

வன்னியில் இருந்து உயிலங்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கந்தளாய் காட்டில் 4 பேர் கைது

கொழும்பு, ஜன. 8

கந்தளாய் காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் பிரதான உணவு மற்றும் மருந்துக் களஞ்சியத்தை பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்து சுமார் 50 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் மீட்கப்பட்டன என்றும் —

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட தேடுதலின் போது 4 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

# தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈ. பி. டி. பி., புளொட் தலைவர்கள்

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரப் பணிகளை ஈ.பி.டி.பி., புளொட் தலைவர்கள் நேற்று ஆரம்பித்துள்ளனர்.

தேர்தல் பிரசாரப் பணிகளைக் கவனிக்க ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும்—

புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனும்—யாழ்ப்பாணம் வந்துள்ளதை அடுத்து அக்கட்சிகளின் பிரசாரப் பணி நேற்று ஆரம்பமானது.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நேற்று தமது தலைவர்களுடன் ஊர்காவற்றுறைக்குச் சென்றார்.

ஊர்காவற்றுறைச் சந்தைக்குச் சென்ற அவர் அங்குள்ள குறைபாடுகளைக்கேட்டறிந்தார்.

குமுதினி படகு திருத்தப்படும் இடத்துக்குச் சென்று திருத்த வேலைகளைப் பார்வையிட்டார்.

அதன்பின்னர் ரி.வடிவேலு திறந்த வெளியரங்கு, ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி ஆகிய இடங்களுக்கும் சென்றார்.

ஆஸ்பத்திரிக் குறைபாடுகளைக் கேட்டறிந்த அவர் அங்குள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பன்முகப் படுத்தப்பட்ட வரவு—செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் கீழ் 10 லட்சம் ரூபாவை வழங்க உறுதியளித்தார்.

அதன் பின்னர் பல இடங்களில் சிறு சிறு தேர்தல் கூட்டங்களை அவர் நடத்தினார் என ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

10 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணியின் ஆதரவை ரெலோ கோருகிறது

கொழும்பு, ஜன. 8

யாழ். உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் ரெலோ அமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரத்திடம் ஆதரவு கோரியுள்ளது.

தற்சமயம் தமிழகத்தில் தங்கியுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரத்துடன் அடையாறில் கடந்த சனிக்கிழமை தாம் தனிப்பட்ட முறையில் பேச்சு நடத்தி ஆதரவு கோரியதாகவும் —

ஆதரவை தருவதாக அவர் உறுதியளித்ததாகவும் — ரெலோ அமைப்பின் செயலதிபர் எம். கே. சிவாஜிலிங்கம் நேற்றிரவு தெரிவித்தார்.

# ஒலுமடுவில் சேதமாக்கப்பட்ட ஹெலி குறித்து உயர்மட்ட விசாரணை!

## தனது உறுப்பினர் சம்பந்தப்படவில்லை என்கிறது ரெலோ

கொழும்பு, ஜன. 8

ஒலுமடுவில் சேதமாக்கப்பட்ட ஹெலி குறித்து ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட தகவல்கள் வெளிவருவதால் அச் சம்பவம் குறித்து உயர்மட்டக் குழு ஒன்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது எனத் தெரியவருகிறது.

பாதுகாப்பு வலயத்துக்குள் ஊடுருவியிருந்த விடுதலைப் புலிகளே இத் தாக்குதலை நடத்தினர் என முதலில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இராணுவத்துக்கு ஒத்துழைப்பை வழங்கிவரும் ரெலோ உறுப்பினர்கள் இடையே இருந்த சிலரே இத்தாக்குதலை மேற்கொண்டனர் எனப் பின்னர் தெரிவிக்கப்பட்டது.

தமது அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் எவரும் இத் தாக்குதலை மேற்கொள்ளவில்லை என ரெலோ அமைப்பு தெரிவித்துள்ளது. அத்துடன் பாதுகாப்பு வலயத்துக்குள் வந்திறங்கிய அந்தக் ஹெலியை விடுதலைப் புலிகளே தாக்கி அழித்துள்ளனர் என ரெலோ அமைப்பின் தலைவர் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் தமது அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் இராணுவத்துடன் இணைந்து செயற்படுவதாகவும் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவது

(10ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்தில் கிபிர் தாக்குதல்!

கொழும்பு, ஜன. 8

மாங்குளம் பகுதியில் புலிகளின் முகாம்கள் எனச் சந்தேகிக்கப்படும் நிலைகள் மீது 'கிபிர்' விமானங்கள் தாக்குதல்களை நடத்தி உள்ளன.

'வெற்றி உறுதி' துருப்பினரின் நடவடிக்கைகள் தொடருவதாக நடவடிக்கைத் தலைமைச் செயலகம் தெரிவித்தது.

## மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் இன்று திறக்கப்படும்

### 2 வாரங்களின் பின்பே செயற்படும்

யாழ்ப்பாணம், ஜன. 8

தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம் இன்று நண்பகல் 12 மணிக்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

இந்த அலுவலகத்தைத் திறந்து வைக்கும் வைபவத்தில் பங்குபற்றுவதற்காகத் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களான முன்னாள் நீதியரசர் ரி. சுந்தரலிங்கம், ஏ. ஜாவிட் யூசுவ் ஆகியோரும் மற்றும் இரு அதிகாரிகளும் வந்துள்ளனர்.

இந்த அலுவலகம் இன்று திறந்து வைக்கப்பட்டாலும் இரு வாரங்களின் பின்பே செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் என்றும் —

யாழ். வந்துள்ள ஆணைக்குழு அதிகாரிகள் இங்கு தங்கி செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வார்கள் என்றும் — மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணையாளர் ஜே. என். போமன் தெரிவித்தார்.

(இ-3-5)

## வங்கியில் கடமையிலிருந்த பொலீஸார் மீது சூடு!

### திருக்கோயில் பகுதியில் சம்பவம்

மட்டக்களப்பு, ஜன. 8

அம்பாறை மாவட்டம் திருக்கோயில் மக்கள் வங்கியில் கடமையில் இருந்த பொலீஸார் ஒருவரைச் சுட்டுவிட்டு, அவரிடம் இருந்த ஆயுதம் அபகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 10.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

(இ-21-3)

## இராணுவ பொலீஸ் கோப்ரல் வவுனியாவில்சூட்டுக்குப்பலி!

### சைக்கிளில் வந்தவர் சுட்டார்

வவுனியா, ஜன. 8

வவுனியா சிந்தாமணிப்பிள்ளையார் கோயிலடியில் நேற்றுக்காலை இராணுவப் பொலீஸ் கோப்ரல் ஒருவர் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நகரில் சுட்டுக் கொல்லப்பட்ட இராணுவப் பொலீஸ் பிரிவைச் சேர்ந்த முதலாவது நபர் இவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதி படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. (இ-164-21-3)

## வன்முறை தவிர்ப்பு உடன்பாடு

### தான் ஒப்பமிடவில்லை என்கிறது ஈ. பி. டி. பி.

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். குடாநாட்டில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களின் போது வன்முறைகளைத் தவிர்த்துக் கொள்வது தொடர்பாக இத் தேர்தல்களைக் கண்காணிக்கும் பணியில் ஈடுபடவுள்ள "சுதந்திரமான, நியாயமான தேர்தல்களுக்கான மக்கள் முன்னணி" மற்றும் 'சுதந்திரமான, நியாயமான தேர்தல் கண்காணிப்புக்குழு' தயாரித்தபொது உடன்பாட்டில் ஈ.பி.டி.பியும் ஒப்பமிட்டதாகக் கொழும்பில் வெளியான செய்திகளை ஈ. பி. டி. பி. அமைப்பு மறுத்துள்ளது.

இது தொடர்பாக ஈ. பி. டி. பி. அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம். சந்திரகுமார் விளக்கம் அளித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:-

வன்முறைகளைத் தவிர்ப்பது தொடர்பாக நான்கு கட்சிகளுக்கும் இடையில் உடன்பாடு ஏற்படுவதை நாம் வரவேற்கிறோம். கொழும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் குண்டு வெடிப்பு!

மட்டக்களப்பு, ஜன. 8

மட்டக்களப்பு ஏறாவூர் பகுதியில் நேற்றுக் காலை 11.45 மணியளவில் நேரம் குறித்து வைத்த குண்டு ஒன்று வெடித்தது.

வீதி ரோந்தில் ஈடுபடும் படையணியை இலக்கு வைத்தே இக் குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இக் குண்டு வெடிப்பால் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

(இ-21-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூபா 5 ஆயிரம் கொடுப்பனவு

கொழும்புத்துறை ஜன.8

யாழ். பெரியகடை [ஜே-80] கிராம சேவையாளர் பிரிவில் மீளக்குடியமர்வு நிவாரணம் பெற முதலாம் 2 ஆம் கட்டங்களில் முத்திரையில் கையொப்பமிட்டவர்களுக்குரிய காசோலைகள் அவர்களுக்குரிய வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளன.

இதுவரையும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு பெறாதவர்கள் தாம் கணக்கு வைத்திருக்கும் வங்கிகளுக்குச் சென்று தமக்குரிய பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று இப்பகுதி கிராம சேவையாளர் அறிவித்துள்ளார். (ஐ - 30 - 5)

## மரண அறிவித்தல்கள்

### ந. த. இராசரத்தினம்
**(N. T. R. சங்கானை)**

சங்கானை பிரதான வீதியைச் சேர்ந்தவரும், பிரபல வர்த்தகருமான ந. த. இராசரத்தினம் 06—01—98 இல் காலமானார்.

இவர் பாக்கியத்தின் அன்புக்கணவரும், புஸ்பவதி, தர்மகுலசிங்கம், குலமணிதேவி, தனலட்சுமி, சறோஜினிதேவி, நித்தியானந்தம், கணேசலிங்கம் (வெள்ளவத்தை), சுகன்யா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நல்லையா மற்றும் மனோராணி, சுப்பிரமணியம், கோவிந்தசாமி (லீலா பேக்கவுஸ்), சிவஞானம் (கல்வித்திணைக்களம், யாழ்ப்பணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சிவபாக்கியம், காலஞ்சென்ற நடராசா மற்றும் செல்வரத்தினம், இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் வயித்திலிங்கம், நேசரத்தினம், சுப்பிரமணியம், சரஸ்வதி, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், திவாஜினி, வசந்தி, சுகந்தி, ஜசிந்தன், சுதாஜினி, சுஜிதா, சுபாஸ், சுஜந்தன், தமிழினி, தமிழ்செல்வன், தமிழரசி, சிவகஜனி, சிவகஜன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 08—01—98 இன்று வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக உரைச்சி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்;
இ. தர்மகுலசிங்கம்
(மகன்)

பிரதானவீதி,
சங்கானை.

(52451)

### பொன்னையா லோகராஜா

மல்லாகத்தைச் சேர்ந்த பொன்னையா லோகராஜா அவர்கள் 7-1-98 அன்று காலமாகிவிட்டார்.

இவர் இராஜஸ்வரியின் அன்புக் கணவரும், மயூரனின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திரு திருமதி பொன்னையா தம்பதிகளின் அன்புப் புத்திரனும், விவேகானந்தன், சரஸ்வதிதேவி, கமலாதேவி, சறோஜினிதேவி, சகுந்தலாதேவி, காலஞ் சென்ற திருமதி தருமராஜா இராஜலட்சுமிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வரியப்புலம் சுன்னாகத்தில் இன்று (8-1-98) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இராஜேஸ்வரி (மனைவி)
மயூரன் (மகன்)

(52469)

### சிற்றம்பலம் நடராசபிள்ளை

வரணி வடக்கைச் சேர்ந்த சிற்றம்பலம் நடராசபிள்ளை (இளைப்பாறிய கிராம சேவையாளர்) 4-1-98 இல் காலமானார்.

அன்னார் இந்திராதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிற்றம்பலம் (கிராமத்தலைவர்) - பாருபதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், இராசகுமாரன் (கிராம சேவையாளர்), இந்திரகுமாரி, இரஞ்சினி (திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர், பிர. செயலகம், கண்டாவளை) ஆகியோரின் அன்புத் தந்தையும், குமாரசுவாமி (பொறுப்பதிகாரி, நீர்வள சபை, யாழ்ப்பாணம்), இரகுநாதன் (மிருக வைத்தியர், தணுக்காய்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (கூட்டுறவு பரிசோதகர்), பராசக்திப்பிள்ளை, குமாரசாமி (இளைப்பாறிய ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 4-1-98 இல் வரணியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

தகவல்,
க. குமாரசாமி
(மருமகன்)

(52466)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பகுதியிலுள்ள நிறுவனத் தலைவர்களுக்கான கலந்துரையாடல் இம் மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் க. தா. சிவபாதம் தலைமையில் நடைபெறும் இக் கலந்துரையாடலில் புதிய வருடத்துக்கான வேலைத் திட்டங்கள் பற்றி ஆராயப்படும். (இ 5)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன. 8

வண்ணை பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயிலில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7 மணிக்கு திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம்பெறும்.


**தேவை**

ஐஸ்பழம் வியாபாரிகள் தேவை.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி,

இல. 564,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சிவா பான்சிஹவுஸ்
185, நவீனசந்தை
யாழ்ப்பாணம்.

(52462)

**லிபேட்டி சினிமா**

அச்சுவேலி.

30 அடி அகலத் திரையில்
9 ஆம் திகதி வரையும்
ரஜனி-ரம்பா நடித்த
அருணாச்சலம்

10 முதல் 13 வரை
ஔவை சண்முகி
நேரம் 10-30, 2-30

(52238)

**யூனிவேர்சல்**

கந்தர்மடம்

A/L 97, 98

துரித மீட்டல் வினா விடை வகுப்பு

PURE / APPLIED MATHS

திரு. A. பத்மநாதன்

திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு 8. — 10. மணி

ஆரம்பம்:- 09 - 01 - 98

வெள்ளி காலை 8. 00 மணி

★ குறிப்பு:- இவ் வகுப்பு மாணவர்களின் வசதிகருதி கன்னாதிட்டி புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தில். திங்கள், புதன், வெள்ளி நடைபெறும்.

(52465)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| இறைவன் படைப்பு: | இறைவன் அழிப்பு: |
|---|---|
| 05 | 09 |
| — | — |
| 03 | 12 |
| — | — |
| 1915 | 1997 |

### அமரர் பொன்னுச்சாமி மாப்பாணி

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

இன்று (8-1-98) வியாழக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இவர் பிரிவால் துயருறும்

செல்லம்மா [மனைவி], பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கச்சாய், பாலாவி,
கொடிகாமம்.

(52468)

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை - சுன்னாகம்
## மீள் கேள்வி அறிவித்தல் - 1998

09-11-1997 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கும், மேலதிகமாக கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கும் அமையக் கீழ்வரும் இறைச்சிக் கடைகளுக்கான கேள்விகள் 01-02-1998 தொடக்கம் 31-12-1998 வரையான காலப்பகுதிக்கு என்னால் கோரப்படுகின்றன. கேள்விப் படிவம் வழங்கப்படும் இறுதித் திகதி 19-01-1998 நண்பகல் 12-00 மணி வரையும், கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 20-01-1998 நண்பகல் 12-00 மணி வரையும், கேள்விகள் திறக்கப்படும் திகதி 20-01-1998 நண்பகல் 12-30 வரை மணி ஆகும்.

| விவரம் | கேள்வி பத்திர பணம் | கேள்வி வைப்பு பணம் | மாத வாடகை | ஆகக்குறைந்த மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1. சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 1,000/- | 100/- | 30,000/- |
| உடுவில் உப அலுவலகம் | | | | |
| 2. தாவடி ஆட்டிறைச்சிக்கடை (கேள்விபெறும் கேள்விக்காரர் இறைச்சி விற்பனைக்காகப் பொருத்தமான இடத்தையும் கடையையும் வழங்கக்கூடியவராய் இருத்தல் வேண்டும்) | 100/- | 1,000/- | — | 50,000/- |


ஆ. மகாலிங்கம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
06-01-1998

(சி/2578)


அதிகாரம் செய்ய வரவில்லை
உபகாரம் செய்யவே விரும்புகின்றோம்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)



X

[ஏ-0011]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உத்தரப்பிரதேசத்தில் ரயில்கள் மோதின!

## 49 பயணிகள் பலி

புதுடில்லி, ஜன, 8

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தில் கடந்த திங்கள் இரவு இரண்டு ரயில்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 49 பயணிகள் உயிரிழந்தனர்; பலர் காயமடைந்தனர்.

வாரணாசி சென்று கொண்டிருந்த காசி விஸ்வநாத எக்ஸ்பிரஸ் ரயிலும் வாரணாசி பயணிகள் ரயிலுமே லக்னோவில் இருந்து 90 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள இடத்தில் மோதுண்டன.

ரயில்ப் பாதையில் மந்தைகள் காணப்பட்டதால் சாரதி ரயிலை நிறுத்தியிருந்தார் என்றும் —

அச்சமயம் பின்னால் வந்துகொண்டிருந்த ரயில் நின்று கொண்டிருந்த ரயிலுடன் மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடும் பனிமூட்டம் காரணமாக நின்று கொண்டிருந்த ரயிலை சாரதியால் அடையாளம் காண முடியாமற் போனதாகவும் முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. ஆனால் இந்த விபத்துக்கு சாரதியே காரணம் என்று விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாகப் பின்னர் தெரிவிக்கப்பட்டது.

விபத்துச் சம்பவம் குறித்து பூரண விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. விபத்துச் சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததும் ரயில்வே அமைச்சர் ராம் விலாஸ் பஸ்வான், உயரதிகாரிகள் சகிதம் சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்து சென்றார்.

(ஐ)

# அமெரிக்க விண்கலம் சந்திரனுக்குப் பயணம்

கேப்கனரெவெல், ஜன. 8

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாஸா ஆள்கள் இல்லாத 'ரோபோ' விண்கலம் ஒன்றை சந்திரனுக்கு ஏவியுள்ளது.

புளோரிடாவில் கேப்கனரெவெலில் உள்ள கெனடி ஏவு தளத்தில் இருந்து இந்த விண்கலம் ஏவப்பட்டது.

சந்திரனில் தண்ணீர் உள்ளதா என்பதை கண்டறிய இந்த விண்கலம் ஆய்வு செய்யும். ஐந்து நாள் பயணத்தின் பின்பு இந்த விண்கலம் சந்திரனின் சுற்றுப்பாதையில் சஞ்சரிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

"லூனர் புரொஸ்பெக்ரர் புறோப்" (Lunar Prospector Probe) என்ற இந்த விண்கலத்தில் நவீன புகைப்படக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

கடந்த 25 ஆண்டுகளுக்குப் பின்னர் அமெரிக்க விண்கலம் ஒன்று சந்திரனுக்கு அனுப்பப்படுகிறது.

(ஐ)

# அல்ஜீரிய படுகொலைகளை தடுத்து நிறுத்தக் கோரிக்கை

ஸ்ரொக்ஹோம், ஜன. 8

வட ஆபிரிக்க நாடான அல்ஜீரியாவில் தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் படுகொலைகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச ரீதியாகக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

அல்ஜீரியாவில் கடைசியாக நடந்த படுகொலைகளில் 400-க்கும் மேற்பட்டோர் பலியானதை அடுத்தே இக்கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

உலக அரங்கில்

சுவீடன் வெளியுறவு அமைச்சர், ஜேர்மன் வெளியுறவு அமைச்சர், இத்தாலிய பிரதமர் ஆகியோர் இந்தப் படுகொலைகளை வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

(ஐ)

## 23 பலஸ்தீன கைதிகள் விடுதலை

ஜெருஸலேம், ஜன. 8

புனித றம்ழான் பண்டிகையை ஒட்டி நல்லெண்ண நடவடிக்கையாக 23 பலஸ்தீனக் கைதிகளை விடுதலை செய்திருப்பதாக இஸ்ரேலிய இராணுவம் அறிவித்துள்ளது.

மேற்கு ஆசிய சமாதான முயற்சியில் ஏற்பட்டிருக்கும் சிக்கலைத் தவிர்க்கும் முயற்சியாக ஐ. நா. சமாதான தூதர் டெனிஸ் றோஸ் இஸ்ரேலுக்குச் சென்றுள்ள சமயத்தில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

(ஐ)

# பொல்பொட் எங்குள்ளார்?

## சீனா மறுப்பு!

பெய்ஜிங், ஜன. 8

கெமரூச் இயக்கத்தின் முன்னாள் தலைவர் பொல்பொட் மருத்துவ சிகிச்சைக்காக சீனாவுக்குத் தப்பிச் சென்றுள்ளார் என வெளியான செய்திகள் ஆதாரமற்றவை என சீனா மறுப்புத் தெரிவித்துள்ளது.

சீன நிர்வாகம் கெமரூச் இயக்கத்துடன் தொடர்புகளை ஏற்கனவே துண்டித்துள்ளது அனைவரும் அறிந்த விடயமே என்று சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கெமரூச்சின் காட்டு தலைமைப் பணிமனையான அன்லோங் முகாமிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்ட பின்னர் பொல்பொட் கம்போடியாவில் இருந்து வெளியேறி விட்டார் என்று தமக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளதாக தாய்லாந்து வெளிவிவகார அமைச்சர் தெரிவித்திருந்தார்.

பொல்பொட் வீட்டுக்காவலில் இருந்து தப்பிவெளியேறி சீனாவுக்குச் சென்று தஞ்சமடைந்திருப்பதாக நொம்பெனில் சில பத்திரிகைகளில் செய்தியும் வெளியாகி இருந்தது.

இந்தச் செய்திகளை தங்களால் உறுதி செய்ய முடியவில்லை என்று நொம்பெனில் உள்ள அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொல்பொட் இன்னமும் கம்போடியாவிலேயே உள்ளார் என 'பாங்கொக்போஸ்ட்' என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தப் பத்திரிகையின் செய்தியாளர் அன்லொங் முகாமில் பொல்பொட்டுடன் உரையாடி சில புகைப்படங்களையும் எடுத்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனிதாபிமானத்துக்கு எதிரான கொடும் குற்றச் செயல்களுக்காக பொல்பொட் சர்வதேச நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவுள்ளார். எனினும் அவர் எங்கே உள்ளார் என்பது இன்னும் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

(ஐ)

# தமிழக தேர்தலில் சூடுபிடிக்கவுள்ள இரு முக்கிய வழக்குத் தீர்ப்புகள்!

சென்னை, ஜன. 8

இரண்டு முக்கிய வழக்குகளில் வெளியாகவிருக்கும் தீர்ப்புகள் தமிழகத் தேர்தல் பிரசாரத்தில் சூடு பிடிக்கப் போகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்திகொலை வழக்கில் ஜனவரி 28-ஆம திகதி தீர்ப்பு வழங்கப்பட உள்ளது.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எவரும் இல்லை.

எனினும் வழக்கின் தீர்ப்பு தேர்தல் பிரசாரத்தில் ஒரு திருப்பு முனையை நிச்சயம் ஏற்படுத்தும் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மற்றும் முன்னாள் அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டு வழக்குகளை விசாரிக்க மூன்று சிறப்பு நீதிபதிகள் நியமிக்கப்பட்டதை எதிர்த்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜெயலலிதா, முன்னாள் அமைச்சர்கள் நெடுஞ்செழியன், செல்வகணபதி, செங்கோட்டையன், சத்தியமூர்த்தி, பரமசிவம் ஆகியோர் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

இவ்வழக்கை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி விசாரித்து வருகின்றார். வழக்கறிஞர்களின் வாதம் முடியும் நிலையில் உள்ளது. ஜனவரி இறுதியில் இவ் வழக்கின் தீர்ப்பு வழங்கப்படும் என்று தெரிகிறது.

சிறப்பு நீதிபதிகளை நியமித்தது சரிதான் என்று தீர்ப்பு வழங்கப்பட்டால் ஜெயலலிதாவை எதிர்த்து பிரசாரம் செய்ய தி.மு.க. வினர் அத் தீர்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வர். சிறப்பு நீதிபதிகளை நியமித்தது சரியல்ல என்று தீர்ப்பு கிடைத்தால் தி.மு.கவுக்கு எதிராக பிரசாரம் செய்ய அத்தீர்ப்பு அ.தி.மு.க.வினருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

சிறப்பு நீதிமன்றத்தில் ஜெயலலிதாவுக்கு எதிராக 6 வழக்குகளில் பொலீஸார் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர். இவற்றில் கொடைக்கானல் ஹோட்டல் வழக்கு, வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கு ஆகியவற்றில் சாட்சிகளின் விசாரணையைத் தொடங்க சிறப்பு நீதிமன்றம் தயாராக உள்ளது.

இந்த விசாரணைக்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

சிறப்பு நீதிமன்றங்களை அரசு அமைத்தது சரியானது தான் என்று தீர்ப்பு வழங்கப்பட்டால் ஜெயலலிதாவுக்கு எதிராக சிறப்பு நீதிமன்றத்தில் தினமும் விசாரணை நடைபெறும்.

(இ-10-8)


## ஓராண்டு நினைவலைகள்



தோற்றம்: 03 — 10 — 1927

மறைவு: 05 — 01 — 1997

**அமரர் செல்லையா சிதம்பரநாதன்**
**(கடைச் சின்னத்துரை)**
**திதி: 08–01–1998**

ஆறாத் துயர்கொண்டு வாடுகின்றோம் அப்பாவே!
நீறாகிப் போனதுவோ உம்முடலம் மேதினியில்
நூறாண்டு ஆகிடினும் மாறாது நின்னினைவு
ஓராண்டு நிறைவதனில் தேறாது வாடுகின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

9/6 மலர்மகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(52463)

மக்கள் சேவையில் எம்மைப் பலப்படுத்தவும், மக்கள் சேவையை எமக்குள் பகிர்ந்து கொள்ளவும்
உங்கள் சின்னம் நங்கூரம்

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி
(புளொட்)

சினம்பர் இல. (67656)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்கொலை முயற்சிகள்:

# அலரி விதை உண்ட 10 பேர் நீதிமன்றில்!

யாழ்ப்பாணம், ஜன. 8

அலரிவிதை உட்கொண்டு தற்கொலை செய்வதற்கு முயன்றதாகத் தெரிவித்து 10பேர் நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களில் ஆறு பேர் பெண்களாவர். அவர்களில் ஒருவர் குழந்தையைப் பிரசவித்த தாயாராவார்.

இவ் வழக்கை விசாரித்த மல்லாகம் நீதிமன்ற நீதிவான் மு. திருவுநாவுக்கரசு அவர்கள் அனைவரையும் 6 மாத நன்னடத்தைப் பிணையிலும், 2,000 ரூபா சரீரப் பிணையிலும் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

பறவைக் காய்ச்சலை ஒழிப்பதற்காக ஹொங்கொங்கில் கோழிகள் முற்றாக அழிக்கப்பட்டமை போன்று குடாநாட்டில் அலரி மரங்களும் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்று நீதிவான் தனது தீர்ப்பில் ஆலோசனை தெரிவித்தார். (ஐ-7)

வவுனியா முகாம்களில் உள்ள

# 49 குடும்பங்கள் தெற்கே செல்ல அனுமதி

தென்பகுதிகளுக்குச் செல்வதற்காக வவுனியா முகாம்களில் தங்கியுள்ள 49 குடும்பங்களைச் சேர்ந்தோருக்கு அவர்கள் விரும்பிய இடங்களுக்குச் செல்வதற்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

முகாம்களில் உள்ளோரை விடுவிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவினர் கடந்த சனி, ஞாயிறு தினங்களில்வவுனியா சென்று ஒவ்வோர் குடும்பத்தினரதும் சுயவிவரப் படிவங்களைப் பரிசீலனை செய்தனர்.

உரிய அத்தாட்சிகள் சமர்ப்பிக்காத 89 குடும்பங்களின் விண்ணப்பங்கள் உரிய ஆதாரம் காட்டப்படும் சமயத்திலேயே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

அகதி முகாமில் தங்கியுள்ள 25 குடும்பத்தினர் குடாநாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை யாழ்ப்பாணம் செல்லுமாறு மேற்படி குழுவினர் அறிவுறுத்தினர்.

புளொட் நாடாளுமன்ற உறுப்பினர்களான சித்தார்த்தன், சிவதாசன், மூர்த்தி ஆகியோரும் வவுனியா நகர இராணுவ பிரிகேடியர், உதவி பொலீஸ் அத்தியட்சகர், வவுனியா அரச அதிபர் ஆகியோர் மேற்படி இரு தினங்களிலும் நடைபெற்ற விசாரணைகளின் போது சமுகமளித்திருந்தனர். (ஐ-164-7)

# ஜனாதிபதியைச்சந்திக்க அனுமதி வழங்குமுன்னர் ஜே.வி.பியினர் குறித்து விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, ஜன. 8

ஜனாதிபதிக்கும்ஜே.வி.பி.பிரதிநிதிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய முன்னர் ஜே. வி. பி. அல்லது ஜே. வி. பி. என்ற பெயரில் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள முயற்சிப்பவர்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டு மூன்று கிழமைக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சு இரகசியப் பொலீசாரைப் பணித்துள்ளது.

தற்போது தென்பகுதியில் இடம்பெற்றுவரும் சம்பவங்களுக்கும் ஜே. வி. பி யினருக்கும் தொடர்புகள் இருக்க வாய்ப்புக்கள் உள்ளன எனத் தங்களுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன என ஜனாதிபதியும், பாதுகாப்புப்பிரதி அமைச்சரும் விடுத்த எச்சரிக்கையை நிராகரித்து ஜே.வி.பி. யினர் வெளியிட்டுள்ள உணர்வலைகளே இரகசியப் பொலீசாருக்கு விடுக்கப்பட்டுள்ள பணிப்புரைக்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மீண்டும் ஆயுதமேந்த முயற்சிப்பதாக தமது அமைப்புக் குறித்து வெளியாகிவரும் தகவல்களில் எதுவித உண்மையுமில்லை எனத் தெரிவிக்கும் ஜே. வி. பியினர் அது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த நேரம் ஒதுக்கித் தருமாறு ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

ஆனால் இது தொடர்பாக இதுவரை ஜனாதிபதியிடமிருந்து தமக்குப் பதில் கிடைக்கவில்லை என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும் கடந்த காலங்களில் தென்பகுதிக் கலவரங்களின் போது ஆயுதமேந்தியவர்களுக்கும் ஜே, வி பியினருக்கும் இடையே நிலவிய இரகசியத் தொடர்புகள் பற்றிய விசாரணை அறிக்கை கிடைத்த பின்னர் அடுத்த மாத மத்தியில் பேச்சுவார்த்தைக்குத் திகதி ஒதுக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

# இயல்பு நிலையை ஏற்படுத்தும் ஒரு முயற்சியே தேர்தல்

## அனுருத்த தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 8

குடாநாட்டில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்கள் வடக்கில் வழமை நிலையை மீண்டும்ஏற்படுத்துவதில் முக்கியஅம்சமாகவிளங்கும். பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்தரத்வத்தை முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலத்துக்கு நீடிப்பது சம்பந்தமான பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உள்ளூராட்சித் தேர்தலை உரிய முறையில் நடத்துவதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவருகின்றன.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இந்தப்பகுதியில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கு தேர்தலை நடத்துவது ஒன்றுதான், மிகச்சிறந்த வழியாகும்— என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ-8)

# முந்த முயன்ற மினிபஸ்கள் வீதியில் மோதுண்டன!

நெல்லியடி, ஜன 8

ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டு வேகமாக ஓடிக் கொண்டிருந்த இரு மினி பஸ்கள் மோதுண்ட சம்பவம் கடந்த செவ்வாயன்று நண்பகல் புத்தூர்ச் சந்தி சோதனை நிலையப் பகுதியில் இடம்பெற்றது.

பின்னால் வந்த மினிபஸ் முன்னால் சென்ற பஸ்ஸுடன் மோதியதில் சிறு சேதம் ஏற்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த பஸ் சாரதிகளும், நடத்துநர்களும் அவ்விடத்திலேயே இறங்கி கைகலப்பில் ஈடுபட்டனர்.

அச்சுவேலியில் இருந்தும் பருத்தித்துறையில் இருந்தும் யாழ்ப்பாணத்துக்குச் சென்று கொண்டிருந்த மினிபஸ்களே இவ்வாறு மோதுண்டன.

சாரதிகள், நடத்துநர்கள் இடையே தகராறு ஏற்பட்டதால் பயணிகள் பதற்றமடைந்தனர். பின்னர் படையினர் தலையிட்டு தகராறில் ஈடுபட்டோரை எச்சரிக்கை செய்ததாக அறியவந்தது. (ஐ-109)

யாழ். தேர்தலில் போட்டியிடும்

# தமிழ்க் கட்சிகளைச்சேர்க்க பொ. ஐ. முன்னணி திட்டம்

குடாநாட்டில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களில் போட்டியிடும் தமிழ்க் கட்சிகளை பொதுசன ஐக்கிய முன்னணியில் சேர்க்கும் நோக்கில் அக்கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள பொ. ஐ. முன்னணி தயாராகிவருவதாகத் தெரியவருகிறது.

உள்ளூராட்சித் தேர்தல்கள் முடிந்த கையோடு பொ.ஐ. முன்னணியின் செயலாளரும் விவசாய, காணி அமைச்சருமான டீ. எம். ஜயரத்ன இப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ளார் எனத் தெரியவருகிறது.

வடக்கில் போட்டியிடும் மூன்று தமிழ்க் கட்சிகளில் இரண்டு பொ. ஐ. முன்னணியில் சேர்வதற்கான உடன்பாட்டை வழங்கும் விதத்தில் தமது கருத்தை ஏற்கனவே வெளியிட்டுள்ளன என அமைச்சர் ஜயரத்ன தெரிவித்ததாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ-10)

கொழும்புத் துறைமுகத்தில்

# ரீ- 56 துப்பாக்கியை திருடிய சிப்பாய்!

கொழும்பு, ஜன. 8

கொழும்புத்துறைமுகத்திலிருந்து வடக்கே கப்பலில் அனுப்பப்படவிருந்த ஆயுதப் பெட்டியை உடைத்து அதிலிருந்த ''ரி - 56 ரக'' இயந்திரத் துப்பாக்கியைக் களவாடிச் சென்ற சிப்பாய் ஒருவரை கடந்த திங்கள் நள்ளிரவு ஊர்மக்களின் உதவியுடன் பாணந்துறைப் பொலீசார் கைதுசெய்தனர்.

பாணந்துறையை வசிப்பிடமாகக் கொண்ட இந்த சிப்பாயின் வீட்டை பொலீசார் சோதனையிட்டபோது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து இந்தக் கைக்குண்டு எடுத்து வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயுதங்களை ஏற்றிய கப்பல் வடக்கு நோக்கி கடந்த செவ்வாய் புறப்படவிருந்த வேளையில் கப்பலில் ஏற்றப்பட்ட பெட்டி ஒன்றை உடைத்து இந்தத் துப்பாக்கி களவாடிய சிப்பாய் பலத்த பாதுகாப்பு நிலவும் கொழும்புத்துறைமுகத்திலிருந்து எவ்வாறு அதை வெளியே கொண்டு சென்றார் என்பது ஆச்சரியமாக உள்ளது எனப் பொலீசார் தெரிவித்துள்ளனர். (ஐ-10)

# சுதந்திர பொன் விழாவைஒட்டி 5 ஆயிரம் ரூபா தங்கநாணயம்

கொழும்பு, ஜன. 8

சுதந்திர தினப் பொன் விழாக் கொண்டாட்டத்தை ஒட்டி ஐயாயிரம் ரூபா தங்க நாணயத்தையும் ஆயிரம் ரூபா வெள்ளி நாணயத்தையும் 200 ரூபாவுக்கான நோட்டையும் 10 ரூபாவுக்கான நாணயத்தையும் மத்திய வங்கி வெளியிடவுள்ளது.

ஐயாயிரம் ரூபாவுக்கான தங்க நாணயம் 8 ஆயிரம் ரூபாவுக்கும், ஆயிரம் ரூபாவுக்கான வெள்ளி நாணயம் ஆயிரத்து 200 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படும்.

புதிதாக வெளியிடப்படும் 200 ரூபாவுக்கான நோட்டுகளும், 10 ரூபாவுக்கான நாணயங்களும் தற்போது புழக்கத்திலிருக்கும் ஏனைய நோட்டுக்கள் மற்றும் நாணயங்களுடன் புழக்கத்தில் விடப்படவுள்ளன.

இந்த நாணயங்கள், நோட்டுக்கள் ஆகியன பெப்ரவரி 4ஆம் திகதியான சுதந்திர தினத்தன்றே வெளியிடப்படவுள்ளன. (ஐ-10)

## செய்திச் சாரம்

### பிரிவுபசாரம்

தென்மராட்சி, ஜன. 8

யாழ். பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனனுக்கு பளை பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச்சங்கத்தினால் கடந்த திங்களன்று பளை பிரதேச செயலக மண்டபத்தில் புதிய பிரதேச செயலர் புத்திசிகாமணி தலைமையில் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.

இவ்விழாவில் பளைப் பிரதேச சபை செயலாளர் கு. ந. பாலச்சந்திரன், பளை கோட்டக்கல்வி அலுவலர் அ. கைலாயபிள்ளை, பளை வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ச. அம்பிகைபாலன், பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் இ. சுந்தரலிங்கம், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் தா. சுவாமிநாதன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எஸ். குணாலசிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர், (ஐ-117)

### பட்டப்பின் டிப்ளோமா பயிற்சி நெறி .

யாழ்ப்பாணம், ஜன. 8

1997/98 ஆம் ஆண்டுக்கான பட்டப்பின் டிப்ளோமா பயிற்சி நெறி எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது,

மேற்படி பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான விரிவுரைகள் யாழ். இந்து மகளிர் கல்லூரி நிலையத்தில் அன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என்று யாழ். கல்விவலயம் 2-இன் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ-5)

### கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 8

உரும்பிராய், ஊரெழு மற்றும் சுன்னாகம், உடுவில் பகுதிகளில் கசிப்பு உற்பத்தியும், விற்பனையும் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன.

இப்பகுதிகளில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட 13 பேர் நேற்று முன்தினம் மல்லாகம் நீதி மன்ற நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவ் வழக்குகள் நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது சந்தேக நபர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே காசுப் பிணைகளில் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார். (ஐ-7)

### பரிசளிப்பு விழா

வலிகாமம் தெற்கு, ஜன.8

கற்பொக்கணை கலைமதி சனசமூக அறவழிச்சிறுவர் பாடசாலையின் பரிசளிப்பு விழா கற்பொக்கணை பிள்ளையார் ஆலய முன்றலில் இ விஜயகுமார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (ஐ-152-5)

### தேர் தரிப்பிடம் புனரமைப்பு

சுழிபுரம், ஜன. 8

சுழிபுரம் பறாளை முருகன் ஆலயத்தில் விமானத்தாக்குதலால் சேதம் அடைந்த தேர் தரிப்பு மண்டபம் திருத்தம் செய்யப்பட்டு வருகின்றது. ஆலய தர்மகர்த்தா சபையினர் தொண்டர் சபையினரின் உதவியோடு இவ் வேலைகளைக் கவனித்து வருகின்றனர். (ஐ-28-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்பகுதிக்கு வெங்காயம் அனுப்ப ஏற்பாடுகள்

அரியாலை, ஜன. 8

யாழ். மாவட்டத்தில் அறுவடை செய்யப்படும் சின்ன வெங்காயத்தை தென்பகுதிக்கு கப்பல் மூலம் ஏற்றுமதி செய்வதற்கு யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

பெப்ரவரி மாத நடுப்பகுதியில் சின்ன வெங்காயத்தை அறுவடை செய்து சந்தைப்படுத்த முடியும் என்று விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அறுவடை செய்யப்படும் சின்ன வெங்காயத்தை கிலோ இருபது ரூபா விலையில் கொள்முதல் செய்து தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்வதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதே சமயம் —

சின்ன வெங்காயத்தை தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்வது தொடர்பான கூட்டம் ஒன்று எதிர்வரும் 15ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-17)

# தெற்கில் சிமெந்து தொழிற்சாலை

கொழும்பு ஜன. 8

அக்மீமன தேர்தல் தொகுதியிலுள்ள நுகதுவ என்ற இடத்தில் புதிய சிமெந்து உற்பத்தி ஆலையை நிறுவுவதற்கான ஒழுங்குகளை தென் பகுதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்டு வருகிறது.

இந்தத் தொழிற்சாலையில் உற்பத்தி நடக்கும் போது இயந்திரங்களின் ஒலி வெளியே கேட்காத விதத்திலும் தூசி வெளியேறாத விதத்திலும் இத்தொழிற்சாலை அமைக்கப்படுகிறது என முதலீட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

[ஐ - 10]

## திருமணம் முடிக்கச் சென்ற

# பருத்தித்துறை யுவதி இத்தாலியில் விபத்தில் பலி!

நெல்லியடி, ஜன. 8

திருமண ஏற்பாடு பூர்த்தியாகிய நிலையில் இத்தாலி சென்ற வடமராட்சியைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவர் அங்கு இடம்பெற்ற விபத்தில் சிக்கிப் பலியானார். அவரது சகோதரன் படுகாயமடைந்துள்ளார்.

பருத்தித்துறை 2 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த விஜயரட்ணம் விஜயமலர் (வயது 27) என்னும் யுவதியே விபத்தில் மரணமடைந்துள்ளார். இவரது சகோதரனான விஜயரட்ணம் ஜெகதீஸ்வரன் (வயது 33) என்பவர் படுகாயமடைந்தார்.

இத்தாலியூடாக சுவிஸ் நாட்டுக்கு மணமகனிடம் செல்லும் வழியில் இத்தாலியில், தங்க வேண்டியிருந்தமையால் அங்குள்ள பொலீஸ் நிலையம் ஒன்றில் பதிவை மேற்கொள்வதற்காகத் தனது சகோதரனுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற வேளையிலேயே, இவ் விபத்து இடம் பெற்றதாகத் தெரியவருகிறது. வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட யுவதி அங்குமரணமானார். (ஐ-109)

# கல்வி அமைச்சின் செயலாளர் நியமனம்

கொழும்பு, ஜன. 8

கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளராக இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த மூத்த அதிகாரியான அன்ட்றா சில்வா கடந்த 5 ஆம் திகதியில்இருந்து நியமிக்கப்பட்டுள்ளார்.

களுத்துறை அரசாங்க அதிபராக பல ஆண்டுகள் பணியாற்றிய அன்ட்றா சில்வா மகாவலி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகவும் பணி புரிந்தார். (ஐ-10)

# யாழ். ஆஸ்பத்திரிக்கு 200 மெத்தைகள்

அரியாலை, ஜன. 8

யாழ். போதனா வைத்திய சாலைக்கு ஒரு தொகுதி பொருள்கள் எடுத்து வரப்படவுள்ளன.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் அவை எடுத்து வரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

200 மெத்தைகள், மருந்துப்பொருள்கள் மற்றும் வைத்திய உபகரணங்கள் என்பனவே இக்கப்பலில் எடுத்து வரப்படுகின்றன.

வைத்தியசாலையின் நிதியில் இருந்து இப்பொருள்களை வைத்தியசாலை நிர்வாகம் கொழும்பில் கொள்முதல் செய்ததாக வைத்திய சாலை நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-17)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 09 – 08 – 1922

உதிர்வு: 09 – 12 – 1997

## திருமதி சரஸ்வதியம்மா வேலு

பாசமாய்ப் பெற்றெடுத்து பக்குவமாய்
எம்மை வளர்த்தெடுத்த அம்மாவே!
மாதம் ஒன்று போய் ஓடி மறைந்து விட்டதம்மா!
எங்கள் எல்லோரின் உயிரும் உள்ளவரை
உம் நினைவு எங்கள் நெஞ்சங்களில்
என்றும் நிலைத்திருக்கும் அம்மா!

உங்கள் நினைவில் வாழும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வேலுநாதன்,
30, மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (52436)

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் முத்துச்சாமி மகாலிங்கம்

(உரிமையாளர், வின்சிலோஸ் கராச்,
149, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.)

அன்னை மடியில்: 24-03-1944

ஆண்டவன் அடியில்: 21 12-1996

திதி: 08-01-1998

அன்பாலும் பண்பாலும் பாசத்தாலும்
எங்களை வழிநடத்தி வாழவைத்த
அன்புத் தெய்வமே!
சுவர்க்கவாயில் திருநாளன்று எம்மையெல்லாம்
பிரிந்து கண்ணன் திருவடியில் சென்றுவிட்டீர்கள்
உங்களை நாம் என்றும் மறவோம்!

உங்கள் ஆத்ம சாந்திக்கு எம் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி அஞ்சலிக்கின்றோம்.

- குடும்பத்தினர்

55, பெரியதம்பிரான் கோவிலடி,
வண். மேற்கு,
யாழ்ப்பாணம். (52427)

# யாழ். வட்ட லீயோ கழகம்

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி அட்டவணை-1997

பிரிவு: "அ"

1. யங் கென்றிஸ்
2. அரியாலை — 10-01-98 (பி.ப. 3-30)
3. வளர்மதி "பி"
4. சென். மைக்கல்ஸ் — 10-01-98 (பி.ப. 4-45)
5. கோ.ம.வி.க.
6. பொற்பதி "பி" — 12-01-98 (பி. ப. 3-30)
7. சென். அன்ரனிஸ் "ஏ"
8. பாடும்மீன் (மஞ்சள்) — 21-01-98 (பி. ப. 3-30)
9. றோயல்
10. சென். நீக்லஸ் — 23-01-98 (பி. ப. 3-30)

(1/2 – 3/4 வெற்றியாளர்கள் – 5/6 வெற்றியாளர்: 22-01-98 (பி. ப. 3-30))

பிரிவு 'ஆ'

11. வைக்கிங்ஸ்
12. கலைவாணி — 09-01-98 (பி.ப.4-30)
13. யுத் கார்மேல் — 22-01-98 (பி. ப. 4-45)
14. கலைக்கழகம்
15. சென். றோக்ஸ் — 12-01-98 (பி. ப. 4-45)
16. பாடும் மீன் (நீலம்)
17. பொற்பதி "ஏ" — 21-01-98 (பி. ப. 4-45)
18. ஈச்சமோட்டை
19. சென். அன்ரனிஸ் "பி" — 23-01-98 (பி. ப. 4-45)

இடம்: பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானம்.

லீயோ இ. ஆனல்ட்,
தலைவர்,
போட்டிக்குழு.

லீயோ ஏ.ரி. அரவிந்தன்,
செயலாளர்,
போட்டிக்குழு.

(சி/2564)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

HONDA 50 CC SELF START மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. போதகர், அசம்லி ஒப் கோட் மானிப்பாய் அல்லது யாழ்ப்பாணம்.
[52431]

புதிய பிரசர் பார்க்கும் கருவி (Jamasu - Japan) விற்பனைக்குண்டு. இத்துடன் ஸ்ரெதஸ் கோப்பும் இணைந்துள்ளது. நேரில் பார்வையிடலாம். 154. கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
[52458]

### தவறிவிட்டது

பியதாச ஆனந்த என்ற எனது விசேட அடையாள அட்டை யாழ். பஸ்நிலையப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பி. ஆனந்தன், வி. எம், வீதி, பருத்தித்துறை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
[52428]

ரதிகலா அன்ரனி மரியதாஸ் ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ். போதனா வைத்தியசாலைக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்,
[52452]

### திருமணசேவை

எங்களிடம் எல்லா மதத்தினருக்கும் எஞ்சினியர், எக்கவுண்டன், டாக்டர். பட்டதாரி ஆசிரியர்கள் உள்ளனர். 63 ஆம் ஆண்டு அத்தம் நட்சத்திரமுடைய புகையிரத திணைக்களத்தில் வேலை புரியும் குருகுல மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை. குறிப்பு, புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும்; ஜர்க்கா திருமணசேவை, 178, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
[52437]

எம்மிடம் ஆசிரியர்கள், ஸ்ரேசன் மாஸ்ரர், கொம்பனி உரிமையாளர்கள், வெளிநாட்டு பொறியியலாளர்கள உள்ளனர் மணப்பெண்களின் ஜாதகத்துடன் விவரங்கட்கு நேரில் / தபால் மூலம் தொடரவும். இயக்குநர், விநாயகர் திருமண சேவை, 11, முதலாம் ஒழுங்கை, நீராவியடி.
[52455]

## ஏற்புத் தடை ஊசி மருந்து இல்லை

தென்மராட்சி, ஜன. 8

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் ஏற்புத் தடை ஊசி மருந்து முடிவடைந்து விட்டதால் இந்த ஊசி மருந்து ஏற்றிக் கொள்வதற்காக இப்பகுதி நோயாளர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கும் மந்திகை வைத்தியசாலைக்கும் சென்று வருகின்றனர்.

மேலும் மலேரியாக் காய்ச்சலுக்கு பாவிக்கப்படும் மருந்தும் முடிவடைந்துள்ளதால் நோயாளர்கள் வெளியில் உள்ள தனியார் மருந்துக் கடைகளிலேயே அதை வாங்குகின்றனர்.

(ஐ-117)

## பளையில் சைக்கிள் இலக்கத்தகடு

1998 ஆம் ஆண்டுக்குரிய சைக்கிள் இலக்கத் தகடுகள் பளை பிரதேச சபை தலைமையலுவலகத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

அசௌகரியங்களைத் தவிர்க்கும் முகமாக விரைவில் சைக்கிள் இலக்கத்தகடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச சபை செயலாளர் கு. ந. பாலச்சந்திரன்


## "எக்காளத் தொனி"

### நற்செய்திக் கூட்டங்கள்

**நிச்சயம் தரும் நற்செய்தி**

அற்புதம் - ஆச்சரியம் - விடுதலை
பிசாசுகள் விரட்டப்பட—நோய்கள் குணமாக
மனநோய்கள் நீக்கப்பட—சமாதானம் பெற

வாருங்கள்! வாருங்கள்! வாருங்கள்!
தேவ செய்தி அளிப்பவர்கள்:

சகோதரன் கிளவுஸ் மொல்லர் (டென்மார்க்)
பாஸ்ரர் மேவின் குணசெல்வம் (இலங்கை)

இடம்: எக்காளத் தொனி
பூரண சுவிசேஷ சபை
இல.21, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 6-ம், 7-ம், 8-ம், திகதி தைமாதம் 1998
நேரம்: பிற்பகல் 3.00 மணிமுதல் 6 மணிவரை (புதிய நேரம்)

அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்!
இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தால்
விடுதலை நிச்சயம் உண்டு.
அல்லேலூயா!

(52418)



"கல்வியுலகின் கலங்கரை விளக்கம்"

## புதிய நாவலர் கல்வி நிலையம்

நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

ஆண்டு 1 முதல் O/L வரை
**பிரிவு - 2**
ஆரம்பம: 09 - 01 - 98 வெள்ளி
மாலை 3 மணி

★ யாழ். மாவட்ட இன்றைய நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவின் ஒருங்கிணைந்த சேவை எமது நிறுவனத்தில் மட்டுமே ......

எமது ஆசிரியர் குழு.

| | | |
|---|---|---|
| ❈ விஞ்ஞானம் | — | P. சந்திரன், T. ஜெயசீலன் |
| ❈ கணிதம் | — | B. கிருபாகரன், P. சிறிசுந்தரராஜா, T. S குணாளன், K. ரஞ்சி |
| ❈ சமூகக்கல்வி | — | K. S. முத்துலிங்கம், S. கோகிலன் |
| ❈ தமிழ் | — | திருஞானம், W. ஜெயபால், K. சிவராணி, S தனுஜா |
| ❈ ஆங்கிலம் | — | S ஈஸ்வரமூர்த்தி, K. சிவராஜா |
| ❈ வர்த்தகம் | — | E. ஜீவா |
| ❈ சமயம் | — | T. முகுந்தன், K. சிவராணி, S. சசிதேவி |

★ ஒவ்வொரு வகுப்பிலும் 40 மாணவர்கள் மட்டுமே
★ ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் பரீட்சைகள் நடைபெறும்.
★ அனுமதிகள் 14 - 01 - 98 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(52445)


## நன்றி நவிலல்

### அமரர் வேதா சிவதாசன்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று" என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய வாழ்ந்து காட்டியவரும், மற்றும் எமது குடும்பத்தின் உயர்ச்சிக்காகவும், மக்களின் நல்வாழ்வுக்காகவும் அரும்பாடுபட்டு தன் உயிரையே அர்ப்பணித்தவருமான எமது இல்லத் தலைவி

### வேதா சிவதாசன்

(முன்னாள் குடும்ப ஆலோசகர், யாழ். சாவகச்சேரி, மல்லாகம் நீதிமன்றங்கள்

அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும், பல்வேறு வழிகளில் உதவியவர்களுக்கும், மலர் வளையங்கள், மாலைகள் சார்த்தியும், அஞ்சலிப் பிரசுரம், அருமையான ஒப்புவுமையற்ற இரங்கலுரை போன்றவை நிகழ்த்தியும் சிறப்பித்தோர்க்கும் அன்னாரின் ஈடு இணையற்ற அன்புக்குப் பாத்திரமான நீதிமன்ற நீதிபதிகள், சட்டத்தரணிகள் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஆகியோருக்கும் மற்றும் யாவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

-குடும்பத்தினர்

76, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (52453)


இலவசம்! இலவசம்!!
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு டசின்
**CURVFORM & CARINA**
பிறசியர்களுக்கும்
ஒரு யுனைற்றெட் பஞ்சாங்கக் கலண்டர்

## இலவசம்

சகல புடைவைக் கடைகளிலும் கிடைக்கும்.

### யுனைற்றெட் பஞ்சாங்கக் கலண்டர்

**மலிவு விலையில்**
மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள
மேலும் விபரங்களுக்கு:

## சிறி முருகன்

303, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(52433)


## நீங்கா நினைவில் ஈராண்டு

மண்ணில்: 12 – 02 – 1968



விண்ணில்: 01 – 01 – 1996

### குணபாலசிங்கம் கிருபாகர்

(விவசாய - பொருளியல் சிறப்பு இறுதியாண்டு மாணவன் - யாழ். பல்கலைக்கழக விவசாயபீடம்)

திதி: 08-01-1998

எண்ணங்களின் ஊடாக என்றும் உம்மைக் காண்கின்றோம்! பிறப்பு எத்தனை சுழற்சிவரினும் அன்புடன் உம்மைக் கூடி வாழும் உணர்வை பகவான் பாபா எமக்கு அருள்வாராக.

அம்மா, அக்கா, அண்ணா, அண்ணி
கு. சாந்தமோகன்,
(கிராம அலுவலகர்)
கொக்குவில்.

(52438)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் கனகராசா சுரேஸ்குமார்

[1996 O/L மாணவன், யாழ். சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயம்]

மலர்வு: 16-03-1980
உதிர்வு: 02-01-1996

திதி: 08 – 01 – 1998 ஏகாதசி

ஆசைத் தம்பியின் ஆத்மசாந்திக்காகப்பிரார்த்திக்கும்:

ஐயா, அம்மா, அக்காமார், அப்பம்மா, சித்தப்பா, சித்தி, தங்கை மதுஷா, மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

தகவல்:
க. கனகராசா (தகப்பன்)
காம்றோட், ஊர்காவற்றுறை. (52396)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலீஸ் அத்தியட்சகர்கள் சிலர் இடமாற்றம்

கொழும்பு. ஜன. 8

கொழும்பு மத்தியபொலீஸ் அத்தியட்சகராக உபாலி சமரக்கோன் நியமிக்கப்பட்டுள்ளார். களுவாஞ்சிக் குடியிலிருந்து இவர் இடமாற்றம் பெற்று வந்துள்ளார். கொழும்பு மத்திய பொலீஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய சிறில் பெர்னாண்டோ அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கெப்பிற்றிகொலாவ பகுதி தீவிரவாத ஒழிப்பு பிரிவிற்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

கொழும்பு துறைமுக உதவி பொலீஸ் அத்தியட்சகராக குற்றப்புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றிய சீ, காரியவசம் நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

(ஐ-10)

# பிக்கு முன்னணி அறைகூவல்

கொழும்பு, ஜன. 8

வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வாக அரசு முன்வைத்துள்ள அதிகாரப் பகிர்வுத்திட்டத்தை உடனடியாக வாபஸ் பெறுமாறு அரசுக்கு நெருக்குதல் கொடுப்பதற்கும், அத்திட்டத்தைத் தோற்கடிப்பதற்கும் அணிதிரளுமாறுகுணுப் பிரதேச பிக்கு முன்னணி அறைகூவல் விடுத்துள்ளது.

கடந்த முதனாம் திகதி கதிர்காம ரஜமகா விஹாரையில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(ஐ-10)

# போலிச் சான்றிதழ்களை வழங்கி வந்த இருவர் கைது

வடக்குக் கிழக்கில் இருந்து கொழும்புக்கு வரும் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும் தமிழர்களுக்கும் பொலீஸ் சான்றிதழ்கள் உட்பட தேவையான போலிச்சான்றிதழ்களை வழங்கி வந்தாகக் குற்றஞ்சாட்டி இருவரை புலனாய்வுப் பொலீசார் கைது செய்துள்ளனர்.

கொட்டாஞ்சேனையில் உள்ள வீடொன்றிலிருந்து இவர்கள் இந்தப் போலிச் சான்றிதழ்களை வழங்கி வந்தனர் எனவும் கைது செய்யப்பட்ட இருவரும் கொழும்பில் வசிக்கும் தமிழர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் இதுவரை நூற்றுக்கணக்கான போலிச் சான்றிதழ்களை வழங்கியுள்ளனர் என விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

பொலீஸார் மேற்கொண்ட தேடுதலின் போது அந்த வீட்டிலிருந்து 30 போலிச் சான்றிதழ்களும், பொலிஸ், கிராமசேவை உத்தியோகத்தர்கள், மற்றும் அரச அதிகாரிகளின் போலி றபர் சீல்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 21 – 12 – 1951 | 09 – 12 – 1997 |

## அமரர் அற்புதரட்ணம் சச்சிதானந்தம்

(சச்சி - படப்பிடிப்பாளர்)

எமது குடும்பத் தலைவனின் மரணச் சடங்கில் பங்கேற்று ஆறுதல் வழங்கியோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்த அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

08–01–1998 இன்றைய நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பர்கள் அனைவரையும் வேண்டிக் கொள்கிறோம்.

மனைவி, உறவினர்.

கொத்துக்கட்டி றோட்,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(52449)

# குருநகரில் பிரசாரம்

குருநகர், ஜன. 8

உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டி ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அமைப்பினர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் தமது பணிகளை ஆரம்பித்துள்ளார்கள்.

யாழ். மாநகர சபைக்கான தேர்தலில் போட்டியிடும் அந்த அமைப்பின் பிரதிநிதிகள் இங்குள்ள குடியிருப்பாளர்கள் வீடுகளுக்குச் சென்று தமது அமைப்பின் சார்பில் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தனர்.

( ஐ -51)

# 73 ஆவது அகவை காணும் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி

அவர்களுக்கு

## வாழ்த்துக்கள்

துர்க்காபுரத்தில் எழுந்தருளி கருணை மழை பொழியும் தாயே!

பல கோடி வணக்கங்கள். அம்மா உமது பணிகள் மேலும் சிறக்க எனது குருமூர்த்தி ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகள் அருள் ஆசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

சுவாமி சச்சிதானந்த செல்லம்மா

அம்மையார்

குருபீடம்

ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமம்,

கைதடி.

(52464)

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

சுன்னாகம்

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை அலுவலக கட்டடத் திருத்தம்

வலிகாமம்தெற்கு பிரதேசசபைஅலுவலகக் கட்டட திருத்த வேலைக்கான கேள்விகள் அரசாங்க, உள்ளூராட்சி சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்களில் ரூபா 6,00,000 ற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன. கேள்விப் பத்திரங்களை மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா 250 ஐயும், மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூபா 2000 ஐயும் செலுத்தி வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்கள் சீல் செய்யப்பட்டு பதிவு அஞ்சல் மூலமோ அல்லது இச் சபையின் கேள்விப் பெட்டியில் இடுவதன் மூலமோ உரிய காலத்திற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். கேள்விகளின் பிரதியொன்று உள்ளூராட்சி ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். கிடைக்கப்பெறும் கேள்விகளை ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு பூரண அதிகாரமுண்டு.

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் இறுதித் திகதி —
19–01–98 நண்பகல் 12.00 மணிவரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி —
20–01–98 மு.ப. 10.00 மணிவரை

கேள்விகள் திறக்கப்படும் திகதி —
20–01–98 நண்பகல் 12.00 மணி

ஆ. மகாலிங்கம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்,
1998–01–06

(சி/1007)

# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி

## 01 - 02 - 1998 - 31 - 07 - 1998 வரை

## சந்தைகள், இறைச்சிக்கடைக்கான பகிரங்க குத்தகை ஏல விற்பனை

# அறிவித்தல்

இதன் கீழ்க் குறிப்பிடப்படும் குத்தகைகளை 01 - 02 - 1998 தொடக்கம் 31 - 07 - 1998 வரையிலான காலப்பகுதிக்கு குத்தகையாக வழங்குவதற்கான பகிரங்க ஏல விற்பனை அவற்றிற்கு எதிரே குறிப்பிடப்படும் இடங்களில், குறிப்பிட்ட நேரத்திலும், காலங்களிலும் கூறப்படும். அந்தநாளன் குத்தகை எடுக்க விரும்புவோர் நேரில் சமுகம் தந்து ஏலத்தில் பங்குபற்றலாம்.

ஏலத்தில் தெரிவு செய்யப்பட்ட குத்தகைக்காரர் குத்தகைத் தொகையின் 1/2 பங்கினை உடனடியாக அவ்விடத்தில் வைத்து செலுத்துதல் வேண்டும் மிகுதித் தொகையினை 3 சம பங்குகளாகப் பிரித்து 1998 பங்குனி மாதத்திலிருந்து 3 மாதங்களுக்குள் ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவதுடன் சபையுடன் குத்தகை ஒப்பந்தம் ஒன்றினையும் செய்து கொள்ளுதல் வேண்டும்.

| குத்தகையின் பெயர் | ஏலம் கூறப்படும் இடம் | காலம் | நேரம் |
|---|---|---|---|
| 01. அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | அச்சுவேலி பொதுச்சந்தை | 15. 01. 98 | காலை 9. 30 |
| 02. அச்சுவேலி ஆட்டிறைச்சிக் கடை | ,, | ,, | ,, |
| 03. வளலாய் தம்பாளை பொதுச்சந்தை | ,, | ,, | ,, |
| 04. புத்தூர் மாட்டிறைச்சிக்கடை | புத்தூர் மத்திய சந்தை | ,, | காலை 11. 00 |
| 05. புத்தூர் ஆட்டிறைச்சிக் கடை | ,, | ,, | ,, |
| 06. நீர்வேலி வடக்கு மீன் சந்தை | நீர்வேலி உப அலுவலகம் | ,, | நண்பகல் 12. 00 |
| 07. மாசிவன் ஆட்டிறைச்சிக் கடை | ,, | ,, | ,, |
| 08. நீர்வேலி உப அலுவலக வளவு | ,, | ,, | ,, |
| 09. உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை | உரும்பராய் பொதுச் சந்தை | 16. 01. 98 | காலை 9. 30 |
| 10. உரும்பிராய் ஆட்டிறைச்சிக் கடை | ,, | ,, | ,, |
| 11. ஊரெழு மாட்டிறைச்சிக் கடை | ,, | ,, | ,, |
| 12. உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை | ,, | ,, | ,, |
| 13. இருபாலைச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | இருபாலைச் சந்தை | 16. 01. 98 | காலை 11. 00 |
| 14. இருபாலை ஆட்டிறைச்சிக் கடை | ,, | ,, | ,, |
| 15. கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | ,, | ,, | ,, |

கதிரவேலு கேதீஸ்வரன்,
விசேட ஆணையாளர்.

வலி. கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
06 - 01 - 1998

(சி-2575)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரதின பாதுகாப்பு ஏற்பாடு

## வீதியோர வியாபாரிகள் கண்டியில் அகற்றப்பட்டனர்

அடுத்த மாதம் 4 ஆம் திகதி கண்டியில் நடைபெறவிருக்கும் சுதந்திரதினப் பொன்விழாக் கொண்டாட்டங்கள் தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடாக கண்டி நகரின் வீதிகளில் பத்திரிகை விற்றுவந்த வியாபாரிகள் கண்டிப் பொலிசாரால் அவ்விடங்களில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 20 ஆண்டுகளாக நகரின் பல வீதிகளில் பத்திரிகை விற்பனை செய்துவந்த வியாபாரிகள் கூட பொலிசாரால் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

## அமெரிக்க குழுவுக்கு யாழ். வர அனுமதி மறுப்பு

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கு கொழும்பு வந்துள்ள அமெரிக்க காங்கிரஸ் தூதுக் குழுவினர் யாழ்ப்பாணம் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

யாழ். பாதுகாப்புச் சூழ்நிலை உரித்தாக இல்லை என அவர்களுக்கு கூறப்பட்டுள்ளது.

இதே வேளை இத்தூதுக் குழுவினர் நேற்று முன்தினம் இராணுவ உயரதிகாரிகள் குழுவைச் சந்தித்து யுத்த நிலைவரம் பற்றியும் நாட்டின் பாதுகாப்புப் பற்றியும் பேச்சு நடத்தினர். (ஐ-9)

## சுழற்சி முறையில் மின் விநியோகம்

தென்மராட்சி ஜன. 8

சாவகச்சேரி பகுதியில் மின் பெறும் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையடுத்து தற்போது சுழற்சி முறையில் ஒன்றுவிட்டு ஒரு நாளுக்கு என்ற அடிப்படையில் மின் வழங்கப்பட்டு வருகிறது. (ஐ-117)

## முறைசாரா பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். கல்வி வலயம் ஒன்றில் முறைசாராக் கல்வி இறுதிப் பரீட்சை நாளை மறுதினம் 10ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இப் பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் பயிற்சி நெறியை மேற்கொண்ட பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் பாடசாலை அதிபர்களிடம் அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ-5)

## 154 பொதிகளில் தபால்கள் வந்தன

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். குடா நாட்டுக்குரிய வெளியூர்த் தபால்கள் அடங்கிய 154 தபாற் பொதிகள் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டன.

தபால்களைத் தரம்பிரித்து விநியோகிக்கும் பணிகள் நேற்றே ஆரம்பமாகின.

இதேவேளை இங்கிருந்து 57 தபாற் பொதிகள் கப்பல் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-7)

## இல்ல வழிபாடு

கொழும்புத்துறை, ஜன 8

யாழ். சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலய ஆண்களுக்கான மரியாயின் சேனை யாளர்களின் இல்லவழிபாடு தலைவர் சகோதரர் வி. பி. தேவதாஸ் தலைமையில் நடைபெற்று வருகின்றது. (ஐ-30)

## வேலணை ஆஸ்பத்திரிக்கு குளிர்சாதனப் பெட்டி

திருநெல்வேலி, ஜன. 8

வேலணை அரசினர் வைத்தியசாலைக்கு மின்சாரத்தில் இயங்கும் குளிர்சாதனப் பெட்டி ஒன்று கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் மூலம் இங்கு எடுத்து வரப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை ''யூனிசெவ்'' நிறுவனம் நோயாளரை வைத்துத்தள்ளும் இரண்டு சக்கர நாற்காலி ஒன்றை இவ் வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளது. (ஐ 135)

# சூரியப்பிரகாசத்தின் பின் கைதானோரின் முழுப்பொறுப்பையும் ஜனாதிபதி ஏற்கின்றார்

''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையின் பின்னர் யாழ். குடாநாட்டில் கைதுசெய்யப்பட்ட பின்னர் தகவல் தெரியாதிருக்கும் தமது பிள்ளைகளினதும், கணவன்மாரினதும் நிலை பற்றி அறியும் வகையில் தகவலற்றோர் சங்கப் பிரதிநிதிகள் கடந்த 29 ஆம் திகதி ஜனாதிபதியை கொழும்பில் சந்தித்து உரையாடினர்.

அவர்கள் யாழ்ப்பாணம் திரும்பியதும் சந்தித்து ஜனாதிபதியுடனான சந்திப்பின் பயனைக் குறித்து அறிய விழைந்தோம். அவர்கள் பலரும் தெரிவித்த தகவல்கள், கருத்துக்களின் தொகுப்பு இது.

சந்திப்பு:
**ஆனந்தன்**

படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் தகவல் தெரியாதிருக்கும் எனது கணவர்; இன்னும் உயிருடன் இருக்கின்றார் என்ற நம்பிக்கையுடனேயே இன்றும் பொட்டுடனும் தாலியுடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன். இந்த வாழ்க்கை தொடருமா? என்பது தாங்கள் தரும் பதிலிலேயே தங்கியுள்ளது.

கடந்த 29 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற கைதாகி பின்னர் தகவல் தெரியாதோர் சங்கப் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதிக்

### மாறி மாறி விசாரணைக் குழு காலதாமதத்தை உருவாக்கும்

கும் இடையிலான சந்திப்பில் கலந்து கொண்ட திருமதி சிவாஜினி இராஜேந்திரன் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவிடம் இவ்வாறு சொன்னார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி—

ஒரு பெண்ணினால் தான் இன்னொரு பெண்ணினுடைய நிலைமையைப் புரிந்து கொள்ள முடியும். நானும் பெண்ணாக இருக்கின்றபடியால் உங்களுடைய நிலைமையைப் புரிந்து கொள்கின்றேன். நானும் கடந்தகால அனர்த்தங்களின் போது கணவனைப் பறிகொடுத்தவள். அதனால் எனக்கும்

பிள்ளைகளின் அன்பு, கணவன் மனைவி பிரிவு என்றால் என்ன என்பது நன்கு தெரியும். உங்களுடைய நிலைமையைக் கேட்டவுடனே நான் என்னையே மறந்து விட்டேன்—

கூடிய விரைவில் உங்கள் கணவர் எங்கு இருக்கின்றார் என்ற செய்தியை நான் தெரியப்படுத்துவேன்— என்று பதிலளித்தார்.

தமதுபிள்ளைகள், கணவன்மார், சகோதரர்களை ஒன்றரை வருடத்துக்கும் மேலாகக் கண்ணாலேயோ, கடித மூலமோ கூடப் பார்க்க முடியாத பெற்றோர்கள், மனைவிமார்கள், உறவினர் பலரும் இவ்வாறு தமது மனக் குமுறல்களை ஜனாதிபதியிடம் வெளியிட்டனர்.

நெஞ்சை உருக்கும் அவர்களின் நிலைகளைக் கேட்ட ஜனாதிபதி பின்னர் தனித்தனியே பதிலளித்தார்.

தூதுக்குழுவில் அங்கம் வகித்த மற்றும் சிலர் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்த விடயங்கள் சில இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

சந்திப்பில் கலந்து கொண்ட கைதடியைச் சேர்ந்த முத்துக்குமாரு கணேசகுருக்கள் ஜனாதிபதியிடம் சொன்னார் — எனது மகன் ஒரு பூசகர். தென்மராட்சிக்குப் படையினர் முன்னேறிய போது அவர்களை வரவேற்று பிரசாதங்களை வழங்கி கௌரவித்தவர். செம்மணிச் சந்தி ஊடாக கோயில் ஒன்றுக்குச் சென்ற சமயம் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.— என்றார்.

தமது மகனைக் கைது செய்த இராணுவக் கப்டனின் பெயரையும் அவர் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

சந்திப்பில் கலந்து கொண்ட மற்றொருவரான திருமதி மீரா அருள்நேசன்—

எனது தம்பி ஒரு கிராம சேவகர். அரச பணிகளில் ஈடுபடும் ஊழியர்களையும் யாழ்ப்பாணத்தில் அரசபடையினர் கைது செய்திருக்கின்றனர். அரச உத்தியோகத்தர்களுக்கே இந்நிலை என்றால், சாதாரணமான மக்களின் நிலை என்னவாகும் என எண்ணிப் பாருங்கள்— என்று ஜனாதிபதியிடம் கேட்டார்.

சந்திப்பில் கலந்து கொண்ட மற்றொருவரான திருமதி தமிழ்தேவி ஜெயந்திரன் —

''புலிகள் எம்மை வன்னிக்கு வருமாறு அழைத்தும் நாம் உங்களது அன்பான அழைப்பை ஏற்று எமக்கு இனி நல்ல காலம் பிறக்கப் போகின்றது என்று எண்ணிக் குடாநாட்டுக்கு வந்தோம். கடந்த இரு ஆண்டுகளாக உங்களால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுக்கள் விசாரணையை மேற்கொண்டன. ஆனால் அந்த விசாரணைகளால் எவற்றை அறிய முடிந்தது? வீண் காலதாமதத்தைப் போக்காது தயவு செய்து எமது பிள்ளைகள், கணவன்மார்கள் எங்கிருக்கின்றார்கள் என்ற முடிவைப் பெற்றுத்தர வேண்டும்— என்று ஜனாதிபதியிடம் கேட்டார்.

### முழுப்பொறுப்பையும் ஏற்றார்

இவற்றுக்குப் பதிலளித்த ஜனாதிபதி சூரியபிரகாசம் இராணுவ நடவடிக்கையின் மூலம் குடாநாடு படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டபின்னர் இளைஞர்கள் கைது செய்யப்பட்டமைக்கான முழுப் பொறுப்பையும் தான் ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்தார்.

''அவர்கள் பற்றிய தகவல்களை விரைவாக வெளியிட வேண்டியது ஜனாதிபதியாகிய எனது தலையான கடமை''- என்றும் அவர் சொன்னாராம்.

தகவலற்றோர் சங்கத்தின் தலைவர் ப. செல்வராஜா ஜனாதிபதியிடம் கூறியது வருமாறு:

எனது மகன் உட்பட 30 இளைஞர்கள் செம்மணிச் சந்தியில் வைத்துக் கைது செய்யப்பட்டார்கள். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி மற்றும் குடும்பத்தினர் படுகொலை செய்யப்பட்ட இடமும் இதுதான். இன்று எல்லோரும் செம்மணிச் சந்தியை கிருஷாந்தி சந்தி என்று கூறும் அளவிற்கு யாழ்ப்பாண நிலைமை மாறி இருக்கின்றது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை அவர்கள் காணாமல் போனவர்கள் யாவரும் விடுதலைப் புலிகளுடன் இணைந்து விட்டனர் எனக் கூறியிருக்கின்றார்.

எமது பிள்ளைகள் புலிகளுக்கு ஆதரவானவர்களாயின் நாம் வன்னி சென்றிருப்போம். ஏன் இங்கும் தொடர்ந்து வாழ்கின்றோம் என்பதை நீங்கள் தயவு செய்து புரிந்து கொள்ள வேண்டும் — என்றார்.

தகவலற்றோர் சங்கத்தின் செயலாளர் ஐ. சிவராசா ஜனாதிபதியிடம் கூறியதாவது:

எனது மகனை இராணுவத்தினர் கைது செய்தனர். நான் உடனே சாவகச்சேரி இராணுவ முகாம் சென்று முறையிட்டேன். அவர்கள் நாம் யாரையும் கைது செய்யவில்லை என்று பதிலளித்தனர். நானோ ஒரு நோயாளி. எனது மகனின் உழைப்பை நம்பியே வாழ்கின்றேன். அவர் இல்லை என்றால் நாமும் இறந்து விட வேண்டிய நிலையே ஏற்படும்.

நான் பணிவாக உங்களிடம் வேண்டுவது எமது பிள்ளைகள் எங்கிருக்கிறார்கள்? அவர்களுடன் நாம் கடிதத் தொடர்பையாவது ஏற்படுத்திக் கொள்ளச் சந்தர்ப்பம் தருதல் வேண்டும். அவர்கள் மீது குற்றம் யாதேனும் இருந்தால் அவர்கள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதே — என்றார்.

இவர்கள் யாவரதும் கருத்துக்களைக் கேட்ட ஜனாதிபதி —

சுயாதீனமான விசாரணைக்குழுவொன்றை நான் நியமிக்கின்றேன். அக்குழு ஆறுமாத காலத்துள் எனக்கு விரிவான அறிக்கையைப் பெற்றுத்தரும். அப்போது நான் உங்களுக்கு இறுதியான நம்பிக்கையான முடிவை அறிவிப்பேன் என்றார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் கலந்து கொண்ட பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளிடம் சந்திப்பின் பலாபலன்களைப் பற்றிக் கேட்டபோது அவர்கள் பின்வரும் கருத்துக்களை முன்வைத்தனர்:

★ ஜனாதிபதி கைதாகி பின்னர் தகவல் தெரியாதுள்ளோரின் விடயம் குறித்து கூடிய கவனம் எடுக்கின்றார்.

★ எனினும் விசாரணைக் குழுக்களை மாறிமாறி நியமிப்பது வெறும் காலதாமதத்தை ஏற்படுத்துவதாகவே அமைகின்றது.

★ தென் இலங்கையிலும் பலஆண்டுகளாக இளைஞர், யுவதிகள் காணாமல போயுள்ளனர் என்றும் யுத்த சூழ்நிலையில் இவ்வாறான சில சம்பவங்கள் இடம் பெறுவது தவிர்க்க முடியாததாக அமைந்து விடுகின்றது. எனினும் அத்தகைய சம்பவங்களோடு யாழ். குடாநாட்டு நிலைமைகளை தாம் ஒப்பிட்டுப்பார்க்கவில்லை எனவும் ஜனாதிபதி கூறியிருந்தார் இக்கருத்து அரசியல் இலாபம் கருதியதாகவே இருக்கலாம்.

★ ஆறுமாத காலத்துக்குள் தீர்க்கமான முடிவைப் பெற்றுத் தருவதாக ஜனாதிபதி கூறியமை இவ்வளவு காலமும் எமது பிள்ளைகள் விடயத்தில் உருப்படியாக எதுவுமே நடைபெறாது போய் விடுமோ என்று ஆங்கலாய்த்த எமக்கு ஓரளவு மனத்திருப்தியைப் பெற்றுத் தருவதாக உள்ளது.

எனினும் 6 மாத கால

### திட்டவட்டமான நிலை இன்னும் தெரியவில்லையே!

விசாரணையை 3மாத காலத்துள் முடித்து அறிக்கை ஒன்றினை வெளியிடுமாறு நாம் ஜனாதிபதியை மீண்டும் ஒரு முறை கேட்டுள்ளோம்.

★ எங்கள் பிள்ளைகள் விடயத்தில் திட்டவட்டமான, நம்பிக்கையான நிலையை ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது பெறமுடியாமற் போனது துரதிர்ஷ்டமே.

எனினும் எங்கள் பிள்ளைகள் எம்மிடம் திரும்பி வர வேண்டும் என்ற வேண்டுதலை கடவுள் நிறைவேற்றுவார் என்று அவரை மட்டுமே நம்பி இருக்கிறோம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மீளக்குடியமர்வு கொடுப்பனவு

"ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின்போது, வலிகாமம் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து, 1996 ஏப்ரலுக்குப் பின்னர் மீளக்குடியமர்ந்த சகலருக்கும் அதற்குரிய நிவாரணப்பணம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமது சொந்த வீடுகளில் மீளக்குடியமராதவர்களும், இப்போதைய புதிய முடிவினால் பயனடைவர். இடம்பெயர்வதற்கு முன்னர் தாம் வசித்த வீடுகளில் மீளக் குடியேறாமல் வேறு இடங்களில் குடியிருப்பவர்களுக்கு இந்த நிவாரணக் கொடுப்பனவை வழங்குவதில்லை என்பது முந்திய முடிவாகும். அது இப்போது மாற்றப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதே.

இடம்பெயர்ந்தவர்கள் எல்லோருமே ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டவர்களே! அவர்களுக்கு உண்டான பாதிப்புகளோடு மீளக் குடியமர்வுக் கொடுப்பனவுத் தொகையான 5,000 ரூபா யானைப் பசிக்குச் சோளப் பொரிதான்!

மீளக்குடியமர்வுச் செலவும் வருவாய் வேறுபாடின்றி எல்லோருக்கும் பொதுவானதே. அவ்வாறிருக்க, சொந்த வீட்டில் மீளக்குடியமராதோர், வேறு வீட்டில் மீளக்குடியமர்ந்தோர் என்று வகைப்படுத்தி ஒரு சாராருக்கு நிவாரணக் கொடுப்பனவை வழங்குவதில்லை என்ற முந்திய முடிவு பெரிதும் பாரபட்சமானதாகும்.

இந்த முடிவு அநீதியானது என்றும், இடம்பெயர்ந்து மீள வந்த எல்லோருக்கும் நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படவேண்டும் என்றும் இப்பத்தியில் ஆரம்பத்திலேயே வலியுறுத்தி இருந்தோம்.

இப்போதாவது அரசு தனது தவறை உணர்ந்து எல்லோருக்கும் கொடுப்பனவு வழங்க முடிவு செய்திருக்கிறது.

பாதுகாப்புப் பிரதேசம் என வகுக்கப்பட்டு, மக்கள் மீளக்குடியேற அனுமதிக்கப்படாத வலிகாமம் வடக்கு மக்களே முந்திய முடிவினால் பெரும் எண்ணிக்கையில் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இடம்பெயர்ந்தவர்கள் மீளக்குடியேறி இன்னும் மூன்று மாதங்களில் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகப் போகின்றன. ஆயினும் முந்திய முடிவின் பிரகாரம் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு பெறத் தகுதியான பெரும் எண்ணிக்கையானோருக்கு அது வழங்கப்படவில்லை.

மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு கட்டம் கட்டமாக வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது. இதற்கென நிதி ஒதுக்கப்பட்டால் அதனை ஒரே தடவையில், சம காலத்தில் எல்லோருக்கும் வழங்குவதே பொருத்தமானதாகும்.

ஒரு சாராருக்கு அல்லது ஒரு பிரதேசத்தைச் சேர்ந்தோருக்கு முன்னரும் வேறு பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பின்னருமாகவே கொடுப்பனவு வழங்கப்படுகிறது. இரண்டுக்கும் இடையேயான இடைவெளி நீண்டதாக இருப்பதால் கொடுப்பனவு தமக்குக் கிடைக்காமல் போய்விடும் என்று பலரும் சந்தேகம் கொள்கின்றார்கள்.

இந்தியப்படை நடத்தியதாக்குதலினால் பாதிக்கப்பட்டோருக்கு பல கட்டங்களில் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பலருக்கு முதலாவது கட்டக் கொடுப்பனவான 2,000 ரூபா தானும் கிடைக்கவில்லை. அப்படி ஒரு நிலை இப்போதைய கொடுப்பனவுக்கும் வந்துவிடக்கூடாது.

# உப்புக் கூட்டுத்தாபன சம்பளம்: 95 ஆம் ஆண்டு நிலுவை கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஜன. 8

உப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு 1995 ஆம் ஆண்டுக்குரிய சம்பள நிலுவை வழங்கப்படவிருக்கிறது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுக்களையடுத்து இவர்களுக்கான சம்பளம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

95 ஆம் ஆண்டுக்குரிய சம்பளத்தை வழங்கத் தேவையான பணத்தை தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரச அதிபர் ஊடாக அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் —

96 ஆம் ஆண்டுக்குரிய சம்பளம் ஊழியர்களின் விவரங்கள் கிடைத்ததும் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## லயன்ஸ் உதவி

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ் லயன்ஸ் கழகம் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் விழிப்புலனற்றோர் சங்க அங்கத்தவர்கள் இருவருக்கு மாதாந்தம் 500 ரூபா நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது.

இதற்கான காசோலை யாழ். பரி.யோவான் கல்லூரியில் நடைபெற்ற லயன்ஸ் கழகங்களின் பிராந்திய கருத்தரங்கில் வைத்து மேற்படி இருவரிடமும் கையளிக்கப்பட்டன. (ஐ-5)

## யாழ். தெரிவு அணிக்கான இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். மாவட்ட கிரிக்கெட் அணியை தெரிவு செய்வதற்கான போட்டித் தொடரில் பரீட்சைப் போட்டி இன்று காலை 9 30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாக இருக்கின்றது.

யாழ் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் இப்போட்டித் தொடரில் இன்றைய போட்டிக்கு 22 வீரர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

அழைக்கப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

எஸ். தயாளன், எஸ். கஜேசன், வி. சஞ்சீவ், கே. வரப்பிரதன், பி. அருணோதயம், என் சுரேஷ்குமார், பி ரூபேந்திரன், டி. ரெமேஷன், கே. சிவன்சேய், கே. கேதீஸ்வரன், எஸ். ஹரிதாஸ், எம் மோகனதாஸ், ஆர். சாஜஹான், கே. நிஷாந்தன், கே. சிராளன், எஸ். ஜெனிற்றன், எஸ். நிமலன், எஸ். பாஸ்கரன், எஸ். ஜெகஜீவன், கே. சசிகரன், எஸ். சபாநாதி, பி. பேர்ட்டி பனிஸ்ரர். [இ-3]

## கல்வி நிர்வாக சேவை தரம்-I பதவி உயர்வுபெற்ற 16 தமிழர்

யாழ்ப்பாணம், ஜன. 8

கல்வி நிர்வாக சேவையின் தரம் 1-க்கு 179 பேர் பதவி உயர்வு பெற்றுள்ளனர். இவர்களில் 16 பேர் தமிழர்கள்.

அவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

ரி. அரியராஜசிங்கம், எஸ். அந்தோனிமுத்து, கே. கந்தசாமி, எஸ். கமலநாதன், எஸ். மகாலிங்கம், ரி. மயில்வாகனம், எஸ். நல்லையா, ஆர். பரமேஸ்வரன், செல்வி ரி. பெரியதம்பி, சி. புவேந்திரன், ஆர். ராஜலிங்கம், பி. எஸ். சர்மா, திருமதி டி. செல்வராஜா, ஈ. சிவானந்தன், எம். ஜே. தங்கராஜா, எஸ். கே. சோமயானந்தன்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜன. 8

கோப்பாய் வடக்கு ஸ்ரீ சக்கராழ்வார் ஆலயத்தில் இன்று வைகுந்த ஏகாதசி விழா நடைபெறவுள்ளது. இரவு நித்திரை விழிப்பும் நாளை தீர்தோற்சவமும் இடம்பெறும். கூட்டுப் பிரார்த்தனை, சமயச்சொற்பொழிவு, புல்லாங்குழல் கச்சேரி என்பனவும் இடம்பெறவுள்ளன. (ஐ)

★ ★ ★

காரைநகர் திக்கரை முருகமூர்த்தி ஆலயத்தில் இன்று கார்த்திகைத் திருவிழாவை ஒட்டி அபிஷேக, ஆராதனைகள் நடைபெறவுள்ளன. (ஐ)

★ ★ ★

நல்லூர் வடக்கு அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலில் திருவெம்பாவையை முன்னிட்டு தினசரி அதிகாலை "திருப்பள்ளி எழுச்சி" பாடல்கள் படித்தலும், பூசை முடிவில் திருவாதவூரர் அருளிச்செய்த "திருவெம்பாவை" இருபது பாடல்களும் பாடப்பட்டு வருகின்றன. (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகரர், விநாயகர் ஆலயத்தில் திருவெம்பாவையை முன்னிட்டு அதிகாலை 4-30 மணிக்கு திருப்பள்ளி எழுச்சி ஓதலும், பூசை முடிவில் காலை 6-30 மணிக்குதிருவாதவூரர் பெரிய புராணம் வாசித்துப் பயன் சொல்லும் நிகழ்வும் ஆலய பரிபாலனசபையின் தலைவர் தம்பு தியாகராசா தலைமையில் இடம்பெறுகிறது. (ஐ-30)

★ ★ ★

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப்பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திவரும்வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஸ்கந்தா கல்லூரி ஆசிரியர் ஆறு. திருமுருகன் "யார்க்கெடுத்துப்பாடுவோம்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை மக்கள் வங்கி இளைப்பாறிய பிரதிமுகாமையாளர் செ. சோமசுந்தரம் நிகழ்த்துவார். (ஐ-30)

★ ★ ★

மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்மன் கோயிலின் வருடாந்த உற்சவம் கடந்த 3 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், தீர்த்தத் திருவிழா பூரணைதினமான திங்கட்கிழமையும் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

பொன்னாலை அருள்மிகு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை அதிகாலை 4 மணி முதல் வைகுண்ட ஏகாதசி உற்சவம் நடைபெறும்.

காலை 6 மணிக்கு சுவர்க்க வாயில் தரிசனமும், காலை 9-30 மணிக்கு வசந்த மண்டப்பூசையும், முற்பகல் 11 மணிக்கு இரதோற்சவமும் இடம்பெறும். மறுநாள் வெள்ளிக்கிழமை "சமுத்திர" தீர்த்தோற்சவமும் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வுகள் யாவும் மஹோற்சவ பிரதமகுரு "கிரியா கலாமணி" சிவப்பிரம்மஸ்ரீ ச. சோமஸ்கந்தக் குருக்கள் தலைமையில் இடம்பெறும். (ஐ-30)

## நாளை

**மார்கழி 25**

வெள்ளிக்கிழமை

திதி: துவாதசி
பின் இரவு 1.23 வரை.
நட்சத்திரம்: கார்த்திகை
முற்பகல் 8.50 வரை.
சுபநேரம்: 6.32-8.02
ராகுகாலம்: 11.02-12.32
(பகலுக்கும் இரவுக்கும் பஞ்சாங்க நேரப்படி)

## இளைஞனை 3 ஆவது தடவை பாம்பு தீண்டியது

ஆறு மாதகால இடைவெளியில் மூன்றாவது தடவையாக பாம்பினால் கடியுண்ட இளைஞன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நிலவு வெளிச்சத்தில் மாட்டுக்கு வைக்கோல் எடுக்கச் சென்ற வேளையிலேயே பாம்பு கடித்ததாக தெரிவிக்கப்பட்டது.

முன்னர் இருதடவைகள் இவர் பாம்பு கடிக்கு இலக்காகியிருந்தார்.

சாவகச்சேரி சிவன் கோயிலடியைச் சேர்ந்த பாலச்சந்திரன் பிரபாகரன் (வயது 19) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார். (ஐ-117)

## பரிசளிப்பு விழா

தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையின் புதிய மண்டபத்திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் திருமதி கோகிலா மகேந்திரராஜா தலைமையில் இரு நிகழ்வுகளாக நடைபெறும்.

முதலாவது நிகழ்வில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் ஆதரவுடன் அமைக்கப்பட்ட மண்டபங்களை வலி. வடக்கு பிரதேசச் செயலர் திருமதி ப. திலகநாயகம் போல், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் திறந்து வைப்பர்.

இரண்டாவதாக நடைபெறும் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக வலயம் - 2 கல்விப் பணிப்பாளர் சி. சிவராசாவும் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக்கல்வி அலுவலர் ஆ. கமலநாதனும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரக வெளிக்கள அதிகாரி கதிரி ஜோர்டனும் கலந்து கொள்வர். (ஐ-9)

## முட்டை விலை வீழ்ச்சி

சாவகச்சேரி சந்தையில் முட்டையின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. 7 ரூபா 50 சதமாக விற்கப்பட்டு வந்த முட்டை நேற்று முன்தினம் 4 ரூபா 50 சதமாக விற்பனையானது. (ஐ-117)

## இலவச வகுப்பு

யாழ்ப்பாணம் ஜன 7

யாழ். சைவ பரிபாலன சபையினரால் நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த ஞாயிறு முதல் இலவச பண்ணிசை வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

தேவார இசைமணி இ. திருஞானசம்பந்தன் பண்ணிசை வகுப்பின் ஆசிரியராகக் கடமை ஆற்றுகின்றார்.

ஞாயிற்றுக் கிழமைகளில் முற்பகல் 10மணி தொடக்கம் பண்ணிசை வகுப்பு நடைபெறும். (இ-7)

## ப. நோ. கூ. ச. கட்டட புதுவிழா

அளவெட்டி — மல்லாகம் ப. நோ. கூ. சங்கத்தின் மறுசீரமைக்கப்பட்ட கட்டடத்தில் புகுவிழா நாளை காலை 11 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

வலி - வடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் இக்கட்டடம் புனரமைக்கப்பட்டது. (இ-3)

## சாயி சிந்தனை

உடலுக்கு உணவு தந்து அதைக் காப்பதற்கும் பேணுவதற்கும் கவனம் எடுக்கின்றீர்கள். அது போலவே மனம், சித்தம், புத்தி இவைகளும் நல்லவிதமாக சத்தூட்டப்பட வேண்டும். காலையில் கோப்பி அருந்தாவிட்டால் தலையிடி ஏற்படும். காலை ஜபம் தவறிப் போகிறதே அதனால் என்ன நேர்கிறது? ஒருவேளை அது உங்கள் பழக்கமாக இல்லாமல் இருக்கலாம்.

இப்போது இந்த மரநிழலில் இருக்கிறீர்கள். மதிய உணவு வேளை வருகிறது. பசியானது உங்களை உணவு தயாராக இருக்கும் இடத்துக்கு இழுத்துச் செல்கின்றது. அதைப் போலவே உங்களைப் பூசை அறைக்கு இழுத்துச் செல்லும் சக்தி எதற்கும் இல்லையே. ஒரு வேளை பூசை அறை இல்லாமலும் இருக்கலாம்.

ஒரு வீட்டினுள் நுழையும்போது அடுக்களையைக் கண்டதும், 'இதுதான் அடுக்களை' என்று சொல்ல முடியும். புகைக் கரியும், கறிச் சரக்குகளின் மணமும் அதைப் பறைசாற்றும். அதைப் போலவே காற்றில் கலந்துள்ள ஊதுபத்தி மணமும், மலர்களின் வாசனையும் 'இதுதான் பூசை அறை' என்று சொல்ல வைக்கும்.

தனியாக ஒரு பூசை அறை வைத்திருங்கள். அல்லது கூடத்தில் ஒரு மூலையை தியானம், ஜபம், பூசைக்காக ஒதுக்கி வைத்திருங்கள். ஒரு நாளில் குறைந்தது இரு தடவை அவ்விடத்தை நாடி, அங்கே கொஞ்ச நேரத்தைச் செலவிடுங்கள் அதுவே உங்கள் ஆத்மாவுக்குப் போசாக்குத் தரும் நேரமாகும்.

இறைவனின் மகிமையைக் குறித்துத் தியானிப்பது களைத்துப் போன பறவை மரத்தில் தங்கி ஓய்வெடுப்பதைப் போன்றது. சக்தியை மீளப்பெற்றதும் பறவை சிறகடித்துப் பறந்து உணவையும் இன்பத்தையும் மீண்டும் தேடிப் போகின்றது. சத்சங்கம் என்கின்ற நல்லோர் கூட்டுறவும் இவ்விதமான ஒரு "ரொனிக்" தான். தொடக்கத்தில் விருப்பம் ஏற்படாவிட்டாலும் சிறிது காலம் பயிற்சி செய்து பாருங்கள்.

(ஆதாரம்: Sathya Sai Speaks: vol. II)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசாரத்துக்கான இறுதித்தினம் குறித்து ஞாயிறன்று முடிவாகும்

யாழ்ப்பாணம், ஜன. 8

யாழ். உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக பிரசார நடவடிக்கைகளுக்கான இறுதித் தினம் பற்றி முடிவெடுப்பதற்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ். பொலீஸ் நிலையத்தில் கூட்டம் ஒன்று நடைபெற உள்ளது.

பொலீஸ் உயரதிகாரிகள், போட்டியிடும் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் இக் கூட்டத்தில் பங்கு பற்ற உள்ளனர்.

தற்பொழுது பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள கட்சிகள் தமது இறுதிப் பிரசாரத்தை நிகழ்த்தும் திகதி இக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

வேட்பாளர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்குதல், மற்றும் தீவுப்பகுதியில் சில குழுக்கள் ஆயுதங்களுடன் திரிவதால் எழக்கூடிய பிரச்சினைகள், அதனைத் தீர்க்கக் கூடிய வழிமுறைகள் பற்றியும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட உள்ளது. (இ-9)

## ஒலுமடுவில் ..

(முதலாம் பக்கத் தொடர்)

அமைப்பு உறுப்பினர்கள் எவரும் ஈடுபடுத்தப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேசமயம் இச்சம்பவம் தொடர்பாக பூரண அறிக்கையை அனுப்புமாறு நடவடிக்கைத் தலைமையகம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்கா தெரிவித்துள்ளார். (இ-10)

## ச. ச. நிலைய நிர்வாகிகள் தெரிவு

குருநகர், ஜன. 8

யாழ். மாநகர சபை எல்லைக்குள் இயங்கி வரும் 42 சனசமூக நிலையங்களும் புதிய நிர்வாகச் சபைத் தெரிவை நடத்தியுள்ளன.

சேதமடைந்த நிலையிலிருந்த சில சனசமூகநிலையங்களில் திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டு அவைகளை இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக யாழ் மாநகர சன சமூக நிலையங்களின் சமாசத்தலைவர் க. நாகேந்திரம் தெரிவித்தார்.

## 3 படகுகள் அழிப்பு என தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 8

மண்டூர் பெரிய போரதீவு வாவியில் விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான மூன்று படகுகளை பொலீஸ் விசேட அதிரடிப் படையினர் தாக்கி நிர்மூலமாக்கியுள்ளனர் என்றும் —

நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதென்றும் — பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-9-3)

## தான்...

(முதலாம் பக்கத் தொடர்)

பின் வெளியிடப்பட்ட உடன்படிக்கையில் இதுவரை நாம் கைச்சாத்திடவில்லை.

புலிகளால் எழுப்பப்பட்டுள்ள அக்கறைத்தல். ஜனநாயக நீரோட்டத்தில் மக்களை இணைத்துக் கொள்ளல் போன்ற விடயங்கள் அந்த உடன்பாட்டில் உள்ளன. அரசியல் சாராம்சம் கொண்ட அந்த விடயங்களை நாம் ஏற்கவில்லை.

இந்த உடன்படிக்கையில் அரசியல் சாராம்சம் இடம் பெறுவது அர்த்தமற்றதாகும்.

கொழும்பில் வெளியான இந்த உடன்படிக்கை தொடர்பான எமது அதிருப்தியைச் சம்பந்தப்பட்டவர்களிடம் நாம் தெரிவித்துள்ளோம் — என்று தெரிவித்தார். (இ-3)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்)

புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன், கட்சியின் தேசிய அமைப்பாளர் சிவநேசன், அரசியல் குழு உறுப்பினர் குருபரன், யாழ். மாவட்ட அமைப்பாளர் எஸ். கிருபைராஜா சகிதம் கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் பகுதிகளுக்குச் சென்று பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரியில் இணைக்களத் தலைவர்கள், அரச ஊழியர்கள் ஆகியோரைச் சந்தித்து அவர்கள் கலந்துரையாடி அவர்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்தனர் என்றும் —

பின்னர் கொடிகாமம் சந்தைக்கு முன்பாக வர்த்தகர்கள் கூடிய கூட்டத்தில் சித்தார்த்தன் தேர்தல் தொடர்பாகக் கட்சியின் நிலைப்பாடு குறித்து உரையாற்றியதாகவும் — யாழ். மாவட்ட அமைப்பாளர் கிருபைராஜா தெரிவித்தார். (இ-3)

### கோணேஸ்வரி வழக்கு

# தகவல் தந்தவர்களின் பெயரைத் தர முடியாது

## எம். பியும் பத்திரிகையாளரும் தெரிவிப்பு

அம்பாறை, ஜன. 8

கோணேஸ்வரி கொலை தொடர்பாக தமக்கு தகவல் தந்தோரின் பெயர் விவரங்களை வெளியிட முடியாது என்று மரண விசாரணையில் சாட்சியம் அளிக்க அழைக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப்பரராஜசிங்கமும், பத்திரிகையாளரான எஸ். எஸ். செல்வநாயகமும் தெரிவித்தனர்.

அம்பாறை சென்றல்முகாம் கிராமத்தில் 19-5-97 இல் கொலை செய்யப்பட்ட குடும்பப் பெண்ணான கோணேஸ்வரி முருகேசபிள்ளையின் மரண விசாரணை நேற்று முன்தினம் கல்முனை நீதிமன்ற நீதிவான் அன்ரன் பாலசிங்கம் முன்னிலையில் நடந்தது.

அதில் சாட்சியமளித்த மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம் தெரிவித்ததாவது:

"இந்தச் சம்பவம் தொடர்பாக சம்பவம் நடந்த மறு நாள் காலை நம்பிக்கையான நண்பர் ஒருவர் எனக்குத் தகவல் தந்தார். நம்பிக்கையானவரிடம் இருந்து தகவல் கிடைத்ததால் உடனே ஜனாதிபதிக்கு அந்தத்தகவலை அனுப்பினேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனது மாவட்ட மக்களின் பிரச்சினைகள் மட்டுமல்ல, ஏனைய பிரதேச மக்களின் பிரச்சினைகள் குறித்தும் நான் குரல் எழுப்பி வருகிறேன்.

நான் இந்தச் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சியல்ல. நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையிலேயே தகவல் எனக்குவந்தது தந்தவர் பற்றிக்கூறமுடியாது — என்றார்.

"சண்டே ரைம்ஸ்" ஆங்கில வார ஏட்டின் செய்தியாளர் எஸ். எஸ். செல்வநாயகம் சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:

எமது பத்திரிகையில் 8-6-97 இல் "கோணேஸ்வரி மரணம் தொடர்பான மர்ம முடுதிரைகள்" என்ற தலைப்பில் செய்தி ஒன்றை எழுதினேன் பலதரப்பட்டவர்களின் தகவல்களை வைத்தே இந்தசெய்தியை எழுதினேன். நான் நேரில் கண்ட சாட்சியல்ல; அவர்கள்பற்றி தகவல் கூறமுடியாது. பத்திரிகைச் சட்டமும் அதற்கு இடம் தராது — என்றார்.

விசாரணை ஏப்ரல் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சாட்சிகளின் நலன்களைக் கவனிக்க சட்டத்தரணி எம். கே பேரின்பராஜா மன்றில் ஆஜராகியிருந்தார். (ஐ-21-3)

# அமெரிக்கக் காங்கிரஸ் குழு நேற்று நாடு திரும்பியது

## யாழ். வர அனுமதி கிடைக்கவில்லை

கொழும்பு, ஜன. 8

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக ஆராயக் கொழும்பு வந்த அமெரிக்க காங்கிரஸ் தூதுக்குழு நேற்று நாடு திரும்பியது.

கொழும்பில் அரச அதிகாரிகள், தமிழ்க் கட்சி பிரதிநிதிகள் உட்பட பலதரப்பட்டவர்களுடன் இக்குழு பேச்சுக்கள் நடத்தி இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து விவரங்களைப் பெற்றது.

யாழ்ப்பாணம் வர அனுமதி கிடைக்காததால் இக் குழுவினர் யாழ்ப்பாணம் வரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. [இ-21-3]

## புனரமைப்பு

கொட்டடித்துறை, ஜன 8

கொக்குவில் நந்தாவல் ஸ்ரீ அம்மன்கோயிலடியில் இயங்கி வந்த மனோன்மணி சனசமூகநிலையம் அண்மையில் புனரமைக்கப்பட்டுள்ளது.

தற்போது நிலைய வாசிகசாலையும் செயற்பட்டு வருகிறது. (ஐ-30 5)

## வவுனியாவ்...

(முதலாம் பக்கத் தொடர்)

குளம் ஊடாக வவுனியா வருபவர்களை நேரடியாக வவுனியாவுக்கு அனுமதிப்பதால் புலிகளும் ஊடுருவலாம் என்பதாலும் — பாதுகாப்பு பலப்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நகரப் பகுதியில் பெண் பொலீஸார் கூடுதலாகச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சுற்றிவளைப்பு தேடுதல்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. [இ-114-3]

## நினைவுதின அனுஷ்டிப்பு

1974 ஆம் ஆண்டு யாழ். நகரில் இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டின் போது நடந்த அசம்பாவிதத்தில் கொல்லப்பட்ட ஒன்பது தமிழர்களினதும் 24 ஆவது நினைவு தினம் நாளை மறு தினம் சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

வருடா வருடம் இத் தினத்தில் முற்றவெளியிலுள்ள தியாகிகள் நினைவுத் தூண்கள் அருகே சர்வமத வழிபாடுகள் நடத்தப்பட்டு வந்தன. பின்னர் போர்ச் சூழலினால் இப்பகுதிக்கு செல்ல முடியாத நிலையேற்பட்டது.

தற்போது தியாகிகள் நினைவுத் தூண்களுக்கு அருகில் செல்லக் கூடியதாக இருப்பதால் இம்முறை இத்தினத்தில் சர்வமத வழிபாடு நடத்தப்பட வேண்டும் என்று கோரப்படுகிறது. (இ-5)


St. Peter's ஆங்கில வகுப்புகளின் புதிய தவணை ஆரம்பமும் இடமாற்ற அறிவித்தலும்

யாழ். வாசிகளுக்கோர் அரிய சந்தர்ப்பம்!

சென்ற வருடம் யாழ். பொலீஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள றிம்மர் மண்டபத்தில் நடத்தப்பட்டு வந்த St. Peter's ஆங்கில வகுப்புகள் பிரதி சனிக்கிழமை தோறும் 3-30 மணி (புதிய நேரம்) முதல் 5 30 மணி வரை யாழ். பிரதான வீதியில் மக்கள் வங்கிக்குச் சமீபமாக உள்ள டாஸ் வியாபார ஸ்தாபனக் கட்டடத்தில் நடைபெறுமென்பதை எமது மாணவர்களுக்கு அறியத்தருகிறோம்.

பயிற்றப்பட்ட பெண் ஆங்கில ஆசிரியர் குழுவினால் கொழும்பு Institute of Western Music and Speech ஸ்தாபனத்தாரின் Spoken English and Writen English பாடத்திட்டத்துக்கமைய திறம்பட பேச்சு வழக்கு ஆங்கிலமும், எழுத்து வழக்கு ஆங்கிலமும் கற்பிக்கப்படுகிறது.

பிரயாண வசதிகள் வழமைக்குத் திரும்பும் பட்சத்தில் கொழும்பில் நடத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றும் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

உங்கள் அனுமதியை உறுதி செய்ய விரைவீர்!

புதிய தவணை ஆரம்பமும் புதிய மாணவர் அனுமதியும் ] 17-01-98

அனுமதிக் கட்டணம் ரூபா 100.00
தவணைக் கட்டணம் ரூபா 150.00

முகாமைக் குரு,
யாழ். மெதடிஸ்த திருச்சபை

(சி/2583)



A|L 2000

கலை வர்த்தக வகுப்புக்கள்

ஆரம்பம்: 10 - 01 - 1998
(சனி 8 மணி)

| | |
|---|---|
| பொருளியல் | — திரு. சண் |
| வர்த்தகம் | — பிரபல ஆசிரியர் |
| கணக்கியல் | — திரு. கொலின்ஸ், சிவா |
| புள்ளிவிவரவியல் | — திரு. ஸ்ரனி |
| அளவையியல் | — திரு. சயந்தன் |
| இந்துநாகரிகம், இந்து சமயம் | — திரு. சிவ. மகாலிங்கம் |
| புவியியல் | — திரு. வேணா |
| தமிழ் | — திரு. ஆர்த்திகன் |
| நாடகம் | — திரு. சத்தியா |

நிரு ரியூசன் சென்ரர்
கோண்டாவில்

(52459)



A/L 2000,99&98

ECON Mr இராஜேஸ்வரன்
REL. (கிறிஸ்)
Mrs A. மல்லிகா
TAMIL. - Mr அருள்
DRAMA Mr. ஜோன்சன்
GEO. Mr. பவான்
HINDUCUL. HINDUISM ] Mr. நித்தி
LOG. Mr. மகிந்தன்

SHAMROCK

(52447)



விற்பனையாகிறது!

தமிழ் மொழிவிருத்தி செயல் நூல்

ஆண்டு - 1 ஆண்டு - 2
ஆண்டு - 3 ஆண்டு - 4

புலமைப் பரிசில் வினாக்களுடன்
ஆண்டு - 5

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

(52470)



வாழ்த்துகின்றோம்

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழநி ஆண்டவர் தேவஸ்தான பரிபாலன சபையின் முன்னாள் செயலாளரும் தற்போதைய நிர்வாக உறுப்பினருமாகிய

திருவாளர் ப. நடராசா

அவர்கள் பதுளை மாவட்ட உயர்நீதிமன்றப் பதிவாளராகப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ பழநி ஆண்டவர் தேவஸ்தான பரிபாலன சபையினரும் அங்கத்தவர்களும்
டச்சு வீதி,
சாவகச்சேரி.

(சி/2582)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08 01 98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org